**சாதி ஒழிப்போம்!**
**தமிழரை இணைப்போம்!**

**தமிழ்த்தேச இறையாண்மை மீட்போம்!**

ஆசிரியர்:
**திருமொழி**

ஆசிரியர்குழு:
**முத்துமுருகன்**
**பாரி**
**கல்பனா**

ஆலோசனைக்குழு:
**மறைமலை**
**ந.மணிமாறன்**
**தி.தென்மொழி**
**தமிழ்ச்செல்வம்**

சட்ட ஆலோசகர்:
**இரா.வைத்தீஸ்வரன்** B.A., B.L.,

முகநூல்:
**தமிழ்த்தேச இறையாண்மை.**

தொடர்பு முகவரி:
243/1, பெரியார் நகர்,
காட்டுநாவல்,
கந்தர்வகோட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை (மாவட்டம்)
அ.கு.எண்: 613301

தொடர்பு எண்கள்:
99431 14128,
76674 43935

# உள்ளடக்கம்...

- தலையங்கம் 2
- தமிழ்நாடு அரசும் ஆளுநர் இரவியும் – ந.மணிமாறன் 3
- சாதியும் சாதி ஆணவக் கொலைகளும் – வ.இரமணி 7
- ‘நீட்’ நுழைவும் - தமிழ்நாட்டு மாணவர் வெளியேற்றமும் – ‘நீட்’ தேர்விற்கு எதிரான தமிழ்நாடு மாணவர்கள் 11
- காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணையும் தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானமும் – பாரி 14
- காஷ்மீர் ஃபைல்ஸ் திரைப்படத் திறனாய்வு – தோழர் தியாகு 18
- தமிழ்த் தேசிய சட்டவியல் – இரா. வைத்தீஸ்வரன் 22
- கோட்டபய வீட்டுக்குப் போ – செந்தில் 24
- அழைப்பிதழ் - சிறுகதை – ம.தி. முத்துக்குமார் 28

# தலையங்கம்

# தமிழ்த் தேசமும் சாதி ஒழிப்பும்

தமிழ்த் தேச இறையாண்மை இயக்கத்தின் அரசியல் இதழாக தமிழக மக்கள் இறையாண்மை இதழ் வெளி வருகிறது.

இந்தியாவின் முழு அடிமையாகவே இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இனங்களின் நிலைமை இருக்கிறது. இந்நிலைமை மாற்றப்பட வேண்டும். இந்தியா என்பது ஒரு தேசம் அல்ல. பல தேசிய இனங்களைக் கொண்டது. இந்தியாவை நாடு என்றோ தேசம் என்றோ சொல்வது அரசியல் பிழையாகும்.

இந்தியா ஒரு தேசம் அல்ல. பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு துணைக் கண்டமாகும். இந்தியாவை தேசம் எனக் குறிப்படுவது தேசம் என்ற கொள்கையை மறுப்பதாகும். தேசம் என்பதின் மூல அடிப்படை ஒரு இனத்தின் மொழியே. இந்தியாவிற்கு என்று ஒரு மொழியோ, தேசிய இனமோ ஒரு தேசமோ இல்லை. இந்தியாவிற்குள் இருக்கும் அனைத்து தேசிய இனங்களையும் பார்ப்பனியத்திற்கு அடிமை செய்யும் பார்ப்பனக் கூட்டம் தான்இந்தியாவை தேசம் எனக் கூறுகிறது. பிறர் அதற்குப் பலியாகி உள்ளனர். இந்தியாவிற்கு உட்பட்டு இருக்கும் அனைத்து தேசிய இனங்களையும் இன அடிப்படையில் ஒழித்துக் கட்டுவதே பார்ப்பனியத்தின் திட்டம். முதலாளிய வளர்ச்சியிலும் முதன்மைப் பாத்திரம் ஆற்றும் பார்ப்பன-பனியா கூட்டமும், தேசிய இனங்களில் ஆதிக்கம் பெற்ற ஆதிக்க சாதியினரில் பெரும் பகுதியினரும் இந்திய தேசத்தை உயர்த்திப் பிடிக்கின்றனர். இதனால் தான் பார்ப்பனியத்தையும், முதலாளித்துவத்தையும் வீழ்த்துவது தேசிய இனக் கொள்கையாக அமைகிறது. எனவே தான் பார்ப்பன இந்தியாவிற்கு எதிராக இந்திய தேசிய இனங்கள் கொள்கை அடிப்படையில் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்.

அதே சமயம் நடைமுறையில் தங்கள் இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தனித்துச் செயல்பட வேண்டும். அதனால்தான் ஒவ்வொரு தேசிய இனமும் தங்கள் தேசிய இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தனிக் கட்சி அமைப்புகளை தொடங்க வேண்டும். தேசிய இனங்கள் அனைத்தும் இந்தியாவிற்கும் பார்ப்பன- பனியா கூட்டத்திற்கும், முதலாளியத்திற்கும் எதிராக ஒத்த கொள்கை கொண்டவர்களாக செயல்பட வேண்டும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் எமது அரசியல் இயக்கமான தமிழ்த் தேச இறையாண்மையும் எமது அரசியல் - பண்பாட்டு இதழும் செயல்படும். இறையாண்மை என்பது தேசிய இனங்களின் அரசியல் ஆளுமையை - ஆட்சியை பேசுகிறது. தேசிய இனம் என்பதே அரசு உரிமை என்பதையே அடிப்படையாகக் கொண்டதாகும்.

தமிழகத்தில் நிலவும் சாதி ஆதிக்கத்தை எதிர்ப்பதை முதன்மை நிலையாகக் கொண்டே செயல்பட வேண்டும். தமிழக சாதி ஒழிப்புப் போராட்டத்தில் - பார்ப்பன எதிர்ப்புப் போரில் பெரியார் முதலிடத்திலிருந்தார். தமிழ்த் தேசம் தொடக்க காலத்திலிருந்தே திருவள்ளுவர் தொடங்கி, பார்ப்பன எதிர்ப்பில் முதன்மை பங்காற்றி வருகிறது. சாதி ஒழிப்புப் போரில் பெரியார் முக்கிய இடத்தில் இருந்தார். எனினும் சாதி ஒழிப்பில் தமிழ் நாடு முழுமை பெறவில்லை. சாதி ஆதிக்க வெறியர்கள் சாதி ஒழிப்பை ஏற்கவில்லை. மாறாக பார்ப்பனிய கொள்கைகளைக் கொண்டவர்களாகவும், நடைமுறைப் படுத்துபவர்களாகவும் இன்று வரை நீடிக்கின்றனர்.

சாதி ஒழிப்பிலும், தமிழ்த் தேச விடுதலையிலும் முதன்மைப் பாத்திரம் ஆற்றிய தந்தைப் பெரியாரும், பார்ப்பன எதிர்ப்பில்-தத்துவத்திலும், நடைமுறையிலும் இந்திய அளவில் மிகப் பெரிய அளவில் பங்காற்றிய மாமேதை அம்பேத்கரும் நமது செயல்பாட்டில் பேராற்றல்களாக இருக்கின்றனர். இவர்களை நமக்குத் துணையாக கொண்டு செல்வதும். நமது வரலாற்றுக் கடமை ஆகும். நமது அடிப்படை கொள்கையாக மார்க்சியம் திகழும்.

உலகம் முழுவதும் வர்க்கப் போராட்டத்திற்கு தலைமை ஏற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கு முதன்மை மெய்யியலாக இருக்கும் மார்க்சியமே நமக்கும் அடிப்படை யானதாக இருக்கும். தமிழ்த் தேச இறையாண்மையை முன்னெடுக்க பேருதவி செய்யும் தமிழக மக்கள் இறையாண்மையை உயர்த்திப் பிடிப்போம்.



# தமிழ்நாடு அரசும் ஆளுநர் ரவியும்!

❑ ந. மணிமாறன்

தமிழக ஆளுநர் ரவி எவ்வாறெல்லாம் தனது அதிகார வரம்பை மீறி செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்? தமிழக அரசின் நிர்வாகத்தில் தன்னிச்சையாக ஊடுருவி தமிழக அரசின் இறையாண்மையினை மதிக் காமல் துச்சமென மிதித்துகொண்டிருக்கிறார் என்று பட்டியல் போடுவது இக் கட்டுரையின் நோக்கமல்ல! வெள்ளைக்கார ஆட்சியாளர் களின் ஆளுநர்களுக்கும், முந்தைய ஆட்சி யாளர்களின் ஆளுநர்களுக்கும் அவர்களின் அணுகுமுறைக்கும் முற்றிலும் மாறுபட்டு பாசிசக் கண்ணோட்டத்துடனும் ஒரு வேலைத் திட்டத்துடனும் ஆளுநர் ரவி எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை அம்பலப்படுத்துவதே இக்கட்டு ரையின் நோக்கமாகும்.

ஆங்கிலேயர்கள் இரட்டை வடிவ ஆட்சி முறையினை 1920 கால கட்டத்தில் இந்தி யாவில் அறிமுகப்படுத்தியபோது அந்தந்த மாகாணங்களில் ஆளுநரை நியமித்து அவ் வாட்சியினை கண்காணிக்கிற கங்காணி வேலைக்காக நியமித்தார்கள். அவர்களின் வில்லத்தனம் என்பது தனக்கு வேண்டிய நபர்களை பிரதம அமைச்சர்களாக நியமித் தார்கள். அவர்கள் போதுமான சட்டமன்ற உறுப்பினர்கள் பலம் இல்லாமல் இருந்தாலும் அவர்கள் அமைச்சரவை அமைக்க அழைப்பது என்பதை செய்தார்கள். மாற்றுக் கட்சியி னரிடம் ஆளுநரே ஆதரவு கோருவார். அதி காரம் முழுவதும் ஆளுநரிடமே இருந்தது. இத்தகைய ஆட்சிமுறை மக்களின் எதிர்ப்புக்கு ஒரு வடிகாலாக இருந்தது. இது அன்றைய காலகாட்ட ஆளுநர்களின் வில்லத்தனமான அணுகுமுறையாகும். ஆனாலும் பண்பாடு, மொழி, வழிபாடு, கல்வி, நிர்வாகம் என்று எந்த ஒரு துறையிலும் அவர்கள் மூக்கை நுழைத்த தில்லை. அவர்களின் நோக்கம் ஒன்றே ஒன்று தான் வெள்ளையருக்கு எதிராக சதி வேலைகள் எதுவும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது ஒன்றுதான். ஆனாலும் அதையே காங்கிரசு உள்ளிட்ட பிறக் கட்சிகள் எதிர்த்தன. முழு சுதந்திரம் வேண்டும் என்று கோரின. இரட்டை வடிவ ஆட்சிமுறைக்காக நடை பெற்றத் தேர்தல்களை புறக்கணித்தன. வெள்ளையன் கொண்டுவந்த அதே இரட்டை வடிவ ஆட்சிமுறை, அதே அரசியல் சட்டம், அதே ஆளுநர்கள் அதே கங்காணித்தனம் என்று அச்சுப்பிசகாமல் பினபற்றி வரும் இன்றைய ஆட்சிமுறையும் இரட்டை வடிவ ஆட்சி முறைதானே? ஆனாலும் இன்றைய ஆட்சி முறையை இரட்டை வடிவ ஆட்சி முறை என்று யாரும் சொல்வதில்லை. 1942-காங்கிரசு மாநாட்டில் சுயராஜ்ஜியத் தீர்மானம் இயற்றப்பட்டது போல் தமிழகத்திற்கு ஆளுநர் பதவி தேவையில்லை. ஆளுநர் ரவியைத் திரும்பப் பெறுங்கள். தமிழக முதல்வரை சுதந்திரமாக ஆள விடுங்கள் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றினால் அதில் என்ன தவறு இருக்க முடியும்?

ஆனால் இன்றைய மோடி அரசால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் வெள்ளைக் காரனால் மாகாண அரசுகளுக்கு கொடுத்த சுதந்திரத்தை, மரியாதையைக்கூட மாநில அரசுகளுக்குக் கொடுப்பதில்லை. வெள்ளைக்காரனோ இரட்டை வடிவ ஆட்சி முறை என்று அவன் சொன்னவாறு நடந்து கொண்டான். ஆனால் இன்றோ வெள்ளைக்காரனைவிட மோசமாக ஒற்றை வடிவ ஆட்சிமுறையை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள்! எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களின் ஆளுநர்களுடைய அணுகுமுறை என்பது பாசிசக் கண்ணோட்டத்துடன் இந்தியாவின் பன்முகத் தன்மையை மறுத்தும், இந்தியா பல தேசிய இனங் களைக் கொண்ட ஒன்றியம் என்பதை மறுத்தும், ஒரே நாடு, ஒரே மொழி என்று அணுகுவதாக உள்ளது. குறிப்பாக தமிழ ஆளுநராக இருக்கிற ரவி பொறுப் பேற்றதிலிருந்தே இவ்வணுகுமுறையினை விரைவாகவும், தொடர்ச்சியாகவும் செய்து வருகிறார். பொறுப்பேற்ற சில நாட்களி லேயே தலைமைச் செயலாளரையும், காவல் துறைத் தலைவரையும் தனித் தனியாக அழைத்துப் பேசியது என்பதிலிருந்து இவரது வில்லத்தனம் தொடங்குகிறது. தமிழக அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களை திருப்பி அனுப்புவது, கிடப்பில் போடுவது, குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் இருப்பது, அதன்மீது முடிவெடுக்காமலிருப்பது என்ற வகையில் 20-க்கும் மேற்பட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக சட்டமன்றத் தீர்மானங்களை குப்பைக் கூடையில் வீசியதைப் போல் வீசியிருக்கிறார். குறிப்பாக ராசிவ் படுகொலை வழக்கில் எழுவர் விடுதலை குறித்த தீர்மானம், நீட் தேர்வு, இட ஒதுக்கீடு, பொது நுழைவுத் தேர்வு எதிர்ப்பு போன்றவை.

ஆளுநர் ரவியின் இவ்வணுகு முறையினை அதிகாரப் போட்டி, ஈகோ பிரச்சினை, தமிழக முதல்வருக்கும், ஆளுநருக்கும் ஒத்துப் போகவில்லை, ஒத்தப் புரிதலில்லை என்பதாக மட்டும் சுருக்கி நாம் புரிந்து கொண்டால் அது தவறாகிவிடும். அவரது அதிகார மீறலிலும், நிர்வாகக் குறுக்கீட்டிலும் ஒரு நோக்கம் இருக்கிறது, ஒரு வேலைத் திட்டம் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே கல்வி, ஒரே தேர்தல், மாநில அரசுகளின் அனைத்து வருவாயை யும் கொள்ளையடிக்கிற ஒரே வரி, இந்தி, சமக்கிருத மேலாண்மை, மொழித் திணிப்பு என்ற ஒன்றிய அரசின் பாசிசத் திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான அதிகாரிகளை அனைத்து துறைகளிலும் குறிப்பாக கல்வி, அறநிலையத் துறைகளில் நியமிக்கவும் தனது அதிகாரவரம்பை மீறி ஆளுநர் ரவி செயல்படுகிறார். ரவியின் இந்த வில்லத்தனமான பாசிச அணுகுமுறை என்பது வெள்ளைக்கார ஆளுநர்களை விடவும், முந்தைய காங்கிரசு, ஜனதா ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களை விடவும் ஏன் வாஜ்பாய் அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களை விடவும் மிக மோசமான பாசிச அணுகுமுறையைக் கொண்டவராக உள்ளார்.

எனவே ஆளுநர் ரவி தமிழக அரசுக் குத் தெரிவிக்காமல் தன்னிச்சையாக அனைத்து அரசு, தனியார் பல் கலைக் கழக துணை வேந்தர்களின் கூட்டத்தை கூட்டியதும் அதில் மத்திய அரசின் கல்விக் கொள்கையினை நடைமுறைபடுத்துவது குறித்து திட்டமிட்டதும், இந்தி, சமக்கிருத மொழிகளுக்கு முக்கி



**சாதிவெறியையும்**
**மனித உரிமை மறுப்பையும்**
**சவக்குழிக்கு அனுப்பிடுவோம்....**

**மாவீரர்**
**இரட்டைமலை சீனிவாசன்**

யத்துவம் கொடுக்கச் சொல்லி பேசியதும், தமிழைக் கொச்சைப்படுத்தி பேசியதும் சைவ மடங்களுக்குச் சென்றதும், இந்து மத திரு விழாக்களைத் தொடங்கி வைப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பதும், இந்து மதக் கோவில்கள் பல செல்வதும், பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இந்து பாசிச வெறியர் களுக்கு ஆதரவாக வழக்காடி வெற்றிபெற்ற வழக் குரைஞரை ஆளுநர் மாளிகைக்கு வர வழைத்து பாராட்டுவதும் போன்றவை யான தமிழக ஆளுநர் ரவியின் செயல் பாடுகள் என்பது தற்செயல் நிகழ்ச்சி அல்ல. RSS-ஆல் அவ்வப் போவது தயாரித்துக் கொடுக்கப் படுகிற நிகழ்ச்சி நிரலின் வெளிப்பாடு என்பதாகவே நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் காங்கிரசு, பொதுவுடைமைக் கட்சிகள், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி போன்றவை ஆளுநரை எதிர்ப்பது என்ப தானது ஆளுநர் ரவி என்கிற தனி நபரை எதிர்ப்பதாக உள்ளது. ஏனெனில் ஆளுநர் ரவி என்பவர் தனி நபர் அல்ல. அவர் RSS சித்தாந் தத்தின் பிரதிநிதி. அதனைத் தமிழகத்தில் செயல்படுத்திட ஆளுநர் என்ற அதிகாரத் துடன் வந்துள்ள ஒரு நபர். எனவே அவரை இந்த வகையில் அம்பலப்படுத்தாமல் தனி நபராக, அதிகார வரம்பு மீறி செயல்படு கிறாவராக மட்டும் பார்த்து எதிர்ப்பது என்ப தானது வில்லெய்தவனை விட்டுவிட்டு அம்பை மட்டும் பார்க்கின்ற பார்வையாகவும் ஒரு வகையில் மக்களை திசை திருப்புவ தாகவுமே அமையும் என்பதில் சந்தேக மில்லை.

தற்போது உச்சநீதிமன்றம் கூட ஆளுநரின் பேரறிவாளனின் விடுதலை குறித்த அணுகு முறையினை சட்டப்படியானதல்ல என்ற துடன் அதிருப்தியையும் வெளிபடுத்தியும் ஆளுநர் என்பவர் சட்டமன்றத்திற்குக் கட்டுப் பட்டவர் என்பதையும் சுட்டிக் கட்டிக்காட்டி பேரறி வாளன் விடுதலை ஒன்றுதான் சட்டப் படியான தீர்வு என்பதையும் கூறியுள்ளது. ஆனால் இது குறித்தெல்லாம் ஆளுநர் சட்டை செய்யப்போவதில்லை என்பது வேறு. இத்தகைய தமிழக ஆளுநரின் அணுகு முறை என்பது ஒட்டு மொத்த மோடி அரசினுடைய அணுகுமுறையின் வெளிப்பாடு என்பதுதான் உண்மை. எனவே தமிழக சட்டமன்றத்



தையோ அதன் தீர்மானங்களையோ ஒரு போதும் ஆளுநர் ரவி மதிக்கப் போவதில்லை. ஆறரை கோடி மக்காளால் தேர்ந்தெடுக்கப் படும் சட்டமன்றத்தை ஆளுநர் ரவி கால் தூசிக்குகூட மதிப்பதில்லை என்பதுதான் உள்ளார்ந்த உண்மை என்றிருக்க அதன் தீர்மானங்களை எவ்வாறு மதிப்பார்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தினை மதிக்காதவர் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகளை எவ்வாறு மதிப்பார்?

ஆளுநர் தனது நிகழ்ச்சி நிரலின் படி தொடர்ந்து இவ்வாறுதான் செயல்பட்டுக் கொண்டிருப்பார். சட்டமன்றத் தீர்மானமோ, நீதிமன்றத் தீர்ப்புகளோ எள்ளளவும் அவரது அணுகுமுறையினையும், கண்ணோட்ட தினையும் மாற்றப்போவதில்லை. மாறவும் மாட்டார், நிலைமை இவ்வாறு இருக்க, இச்சிக்கலுக்குத் தீர்வு என்ன? தீர்வு ஒன்றே ஒன்றுதான். ஆளுநர் பதவியினை ஒழிப்பது என்பதுதான் முதல் கட்ட ஒரே தீர்வு! ஆனால் இத்தீர்வினை 'ஆட்டுக்குத் தாடி எதற்கு? மாநிலத்திற்கு கவர்னர் எதற்கு?' என்று வசனம் பேசிய திராவிடக் கட்சிகள் உட்பட யாரும் முன் வைக்கப் போவதில்லை. முன்வைக்க வேண்டியது தமிழ்த் தேசியவாதிகளும் கட்சி களும் மட்டுமே! அவர்களால் மட்டும்தான் இத்தீர் வினை உறுதியாக முன்வைக்க முடியும்!

அதற்கு முன்னால் ஆளும் திராவிட கட்சிக்கு நாம் ஒரு அழுத்தத்தை கொடுத்து ஆளுநர் ரவியைத் திரும்பப் பெறவும் கீழ்க்கண்ட கோரிக்கைகளின் அடிப்படையில் தீர்மானங்களை சட்டமன்றத்தில் இயற்றவும் வலியுறுத்த வேண்டும்!

1. ஆளுநரைத் ரவியைத் திரும்பப் பெறவும்.

2. வேந்தர் பதவிகளிலிருந்து ஆளுநரை நீக்கவும்

3. சுதந்திர, குடியரசு தின நிகழ்ச்சிகளில் முதல்வரே கொடியேற்றவும்

4. IAS IPS அதிகாரிகள் அரசின் முன் அனுமதியின்றி ஆளுரை சந்திப்பது, அவர் அழைத்தாலும் மாநில அரசின் அனுமதி யுடன் மட்டுமே சந்திப்பது என்ற கட்டுப் படுகளை விதிக்கவும்.

5. சட்டமன்றக் கூட்டத்தினை தொடங்கி வைப்பது, முடித்து வைப்பது என்ற ஆளுநரின் மரபினை மாற்றி சபாநாயகரே அவற்றினைச் செய்யவும் வேண்டும்!

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் ஒற்றை வடிவ பாசிச ஆட்சிமுறைக்கு எதிரான முதல் நகர்வாக இது அமையும். அதே நேரத்தில் மேற்கண்ட கோரிக்கைகளின் அடிப் படையில் ஆளும் தி.மு.க அரசு தீர்மானங் களை நிறைவேற்றப் அழுத்தம் கொடுக்காமல் இது சாத்திய மில்லை. என்ன அழுத்தம் கொடுத்தாலும் மேற்கண்ட தீர்மானங்களை தி.மு.க அரசு நிறைவேற்றப் போவதுமில்லை. ஏனெனில் அண்ணா காலத்திலிருந்தே திரா விடக் கட்சிகள் தான் தீர்மானித்துக் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்றதில்லை! எதனையும் உறுதியாக நின்று போரடி நிறைவேற்றியதாக அதன் வரலாறும் இல்லை. பதவிக்காக எதனையும் விட்டுக் கொடுக்கவும், எத்தகைய சமரசமும் செய்து கொள்ளும் போக்கினைக் கொண்டவர்கள் தான் திராவிடக் கட்சியினர். இது அண்ணா காலத்திலுருந்தே தொடரும் அவலமாகும். (இது குறித்து தனிக் கட்டுரையே எழுதலாம் என்பது வேறு)

எனவே நம்முன் உள்ள உடனடிக் கடமை என்பது ஆளுநர் ரவி கூட்டாட்சி முறைக்கு வேட்டு வைக்கும் பாசிச வில்லன் என்பதை தொடர்ந்து மக்கள் மத்தியில் பரப்புரை செய்ய வேண்டும். அடுத்து ஆளும் தி.மு.க அரசை மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்ற அழுத்தம் கொடுக்கும் போராட்டங்களை தமிழ்த் தேசியவாதிகள் முன்னெடுக்க வேண் டும். அவர்கள் மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்ற மறுக்கும் நிலையில் நாம் அவர் களையும் ஆளுநர் ரவியுடன் சேர்த்து அம்பலப் படுத்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்! இதுவே நம்முன் உள்ள உடனடிக் கடமையாகும்!






**கஷ்டங்கள் மட்டும் இல்லை என்றால் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும்.**

**- பிடல் காஸ்ட்ரோ**

# சாதியும் சாதி ஆணவக் கொலைகளும்

❑ வ.இரமணி

இந்தியா முழுவதும் சாதி மீறி காதலிக்கும் ஒரே காரணத்திற்காக சாதி கௌரவம் எனும் பெயரில் காதலர்கள், காதல் இணை யர்கள் கொடூரமாகக் கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. இந்தியாவில் நாளொன்றுக்கு 4 ஆணவக் கொலைகள் நடப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 500க்கும் மேற் பட்ட சாதி ஆணவக்கொலைகள் நடந்திருக் கின்றன. இதுவரை கொல்லப்பட்டவர்களில் பெரும் பாலானோர் பட்டியலினத்தைச் சேர்ந்த இளைஞர்கள், பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த இளம்பெண்கள் ஆவர். விருத்தாச் சலம் கண்ணகி - முருகேசன் (2003), தொடங்கி, திருவாரூர், மாற்றுத் திறனாளி அமிர்த வள்ளி - பழனியப்பன் - கைக்குழந்தை (2014), தருமபுரி இளவரசன் (2013), சேலம், கோகுல்ராஜ் (2015), உசிலம்பட்டி விமலா தேவி (2014), உடுமலை சங்கர் (2016), கன்னியாகுமரி சிவா-சவுமியா (2013), ஒசூர், நந்தீஸ் - சுவாதி (2018), திருநெல்வேலி இசக்கிசங்கர் - சத்யபாமா (2018), தூத்துக்குடி பேச்சியம்மாள்-சோலைராஜ் (2019), விருத்தாச் சலம் திலகவதி (2019) கோவை கண்மணி - கனகராஜ் (2019) நாகை ஜனனி (2019), கரூர் ஹரிகரன்(2019), புதுக் கோட்டை சாவித்திரி (2020) திருவண்ணா மலை சுதாகர் (2020), கன்னியாகுமரி சுரேஷ் (2021), கும்பகோணம் பிரபாகரன் (2021), கள்ளக்குறிச்சி அரிகிருஷ்ணன், நிவேதா (2021) எனவொரு நீண்ட கொலைப்பட்டியல் இதற்கு எடுத்துக் காட்டாக நீள்கிறது. இவர் களில் பெரும் பாலானோர் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் என்பது மிக முக்கியம். இக்கொலைகள் அனைத்தும் தமிழகத்தையே உலுக்கிய மிகக்கொடூரமான சாதி ஆணவக் கொலைகளாகும்.

### சாதி ஆணவக் கொலைகளின் பின்புலம்

சாதி ஆணவக்கொலைகள் நடப்பதற்கு முக்கியக் காரணிகளாக இருப்பது சாதி ஆதிக் கம், அகமண முறை, வர்க்கம், ஆணாதிக்க பிற்போக்குத்தனம், சாதியப் பஞ்சாயத்துகள், குடும்ப சொத்துடமை, முதலாளித்துவ வளர்ச்சி, நகர்மய மாதல் மேல் கீழ் என்ற படிநிலையான நிலவுடமை கிராமப்புற சாதியக் கட்டமைப்புகளில் ஏற்பட்டுள்ள தளர்வுகள், வாக்கு வங்கி அரசியல் ஆதாயம் போன்ற காரணிகள் அடிப் படையாக இருக்கின்றன. இவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

90களுக்குப் பின்பான உலக மய, தாராளமய, தனியார்மய கொள் கைகளால் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார, பண்பாட்டு மாற் றங்கள் இன்று சாதியின் இறுக்கத்தைத் தளர்த் தியிருக்கிறது. நடக்கும் சாதி ஆணவக் கொலைகள் என்பது மனுதர்ம வேதங் களை பாதுகாக்கும் மரபார்ந்த சாதிய நிலவுடமை பண்பாட்டிற்கும் தாராளிய முதலாளித்துவ பண்பாட்டிற்குமான முரண் பாட்டின் வெளிப்பாடு ஆகும்.

### அகமணமுறை

சாதிய ஆணவக்கொலைக்கு அடிப்படை சாதியும் அகமணமுறை என்ற ஆணாதிக்கக் குடும்ப இரத்த உறவுமுறைதான் பிரதான பங்கு வகிக்கிறது. அதனைப் பாதுகாத்திட பெண்ணைக் கட்டுப்படுத்துகிறது. தன் குடும்ப பெண் பள்ளர், பறையர் அருந்த தியர் போன்ற சாதியிலுள்ள இளைஞர்களை திருமணம் செய்துவிடக்கூடாது என்று எச்சரிக் கையாக இருக்கிறது. சாதியும் ஆணாதிக்க கருத்தியலும் ஒரு பெண் யாருடன் படுக்க வேண்டும், யாருக்கு பிள்ளை பெற்றுக் கொடுக்க வேண்டும், என்ன உடை உடுத்த வேண்டும், எந்த சாதியில் அவற்றில் எந்த

வர்க்கத்தில் என்ற வரையறையை வலியுறுத்துகிறது படி தாண்டா பத்தினி என்ற பட்டத்தைச்சூட்டி கட்டுக்குள் இருக்க போதிக்கிறது மனுதர்ம சாஸ்திரங்கள். கணவன் இறந்தால் மனைவியும் உடன் கட்டை ஏறவேண்டும் என பெண்ணை உயிரோடு எரித்தும் கணவன் இறந்தால் பூ,பொட்டு, தாலி, மஞ்சள் குங்குமம் அனைத்தையும அழிக்க வேண்டும் என்கிறது. பெண்கள் வேலைக்கு சென்றால் அவள் விபச்சாரி என்றும் கூறும் இழிவான பண்பாட்டைத்தான் இன்றைய மோடி ஆர்எஸ்எஸ் கும்பலும் சாதிய பிற் போக்கு வாதிகளும் தூக்கிப்பிடிக்கின்றனர். இதனை உடைத்து பெண் உரிமையை தனக்கான சுயமான திருமண வாழ்க்கையை தேர்வு செய்யும்போது தடுக்கப்படுகிறாள். காதலித்த தலித் இளைஞன் கொல்லப் படுகிறான்.

பிறப்பிலியே இழிவாகப் பார்க்கப்படும் இரு பிரிவினர் இச்சாதிய சமூகத்தில் பிறப் பிலேயே பால் பாகுபாட்டுடனும் தீண்டா மையுடனும் ஒதுக்கப்படும் இரு பிரிவி னர்கள் யார் என்றால் ஒன்று தலித்கள், இரண்டாது பெண்கள். அடுத்து மக்கள் தொகையில் குறைந்தளவே உள்ள பழங்குடிகள், குறவர்கள், வண ணார்கள், புதிரை வண்ணார்கள் போன்ற பிரிவினர் என சொல்லலாம். ஆனால், காதல் மறுத்த சாதி ஆணவக்கொலைகளை எதிர்ப்ப திலும், இச்சமூகத்தின் சாதியக்கட்டு மானத்தை உடைப்பதிலும், ஒரு ஜன நாயகப் போராட் டத்தை நடத்துவதில் தலித் மக்களும் பெண்களுமே முன்னணி சக்தியாக திகழ்வர். காரணம் சாதி குடும்ப உறவாக இயங்குகிறது. அது இரத்த உறவை பாதுகாக்கிறது. புறமண முறைக்கு எதிராக இருப்பதால் இயல்பாகவே இந்தக் கட்டுப்பாட்டை உடைப்பது காதலாக இருக்கிறது. மனித உறவுகளை விரி வடையச் செய்கிறது. ஆதலால்தான் சாதிய மனுதர்ம வாதிகள் கொதிக்கிறார்கள். பாமக தலைவர் இராமதாசு போன்ற சாதியவாதிகள், தேர்தல் நலனுக்காக சொந்த சாதியை வளர்க்கும் அரசியல் கட்சிகள் சாதியின் இருத்தலுக்கு வேலை செய்கிறார்கள். பெண்ணுக்கு திருமண வயது 21 என சட்டம் கொண்டுவர வேண்டும் என்று குரலெழுப்புகிறார்கள். இதன்மூலம் காதல் திருமணங்களை, சாதிமதம் மறுத்த வாழ்க்கைத் தேர்வை தடுத்திட எண்ணுகிறார்கள்.



**ஆணவக் கொலையில் ஈடுபடும் சாதிகள்**

தமிழ்நாட்டில் சாதி மறுத்த திருமணங்கள் முன்பைவிட அதிகரித்து வருகிறது. சாதி மாறிய காதல் இணையர்களை ஆணவக் கொலை செய்யப்படுவது மூன்று சாதிகளில் அதிகம் நடக்கிறது. குறிப்பாக மேற்கு மாவட் டங்களில் வெள்ளாளக் கவுண்டர் சாதியிலும் தென் மாவட் டங்களில் முக்குலத்தோர் என்று சொல்லப்படும் கள்ளர், மறவர், அகமுடையார் சாதிகளிலும் வட மாவட்டங்களில் வன்னியர் சாதியிலும் நடக்கிறது. மற்ற சிறுபான்மை சாதிகளிலும் சிற்சில நடக்கிறது. ஆணவக் கொலைக்கு சாதிய ஆதிக்கமும் சிந்தனை யுமே அடிப்படை என்றாலும் அவற்றிலும் வர்க்க அந்தஸ்து தீர்மானிக்கிறது. அடித் தட்டு வர்க்கங்களுக்குள் சாதி ஆணவக் கொலைகள் நடப்பதில்லை (ஒரு சில வற்றைத் தவிர). அதேபோல் வசதி படைத்த வர்க்கத்திற்குள் ளும் நடப்பதில்லை. ஆணவக்கொலைகள் அதிகம் நடப்பதே வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தில்தான். முதலில் கீழ்சாதி என்ற வெறுப்புணர்வும் பணக்காரன் - ஏழை என்ற வர்க்க ஏற்றத் தாழ்வும் செல்வாக்கு செலுத்து கிறது. இதற்கு மாறாக, ஒரே சாதியாக இருந் தாலும் அங்கு வர்க்க அந்தஸ்து பார்க்கப்பட்டு பெண் கொடுப்பது மறுக்கப்படுகிறது. இன்னொன்று வேறு வேறு சாதியாக இருந் தாலும் சாதி, மதம் பார்க்காது மாற்றத்தை ஏற்றுக்கொண்டு பல குடும்பங்கள் அங்கீகரிப் பதும் நிகழ்கிறது. ஆதலால்தான் சாதி மறுத்த திருமணங்கள் முன்பைவிட அதிகரித்திருக் கிறது. இவை அதிகரிப்பதன் விளைவே ஆணவக் கொலைகளும் நடக்கிறது. இது சாதிய சங்கங்களால் நடத்தப்படுகிறது.

## வாக்குவங்கி சாதித் திரட்டிசிக்காக செய்யப்படும் ஆணவக் கொலைகள்

தமிழ்நாட்டில் நடந்துவருகிற பல ஆணவக் கொலைகள் எதேச்சையாகவோ உணர்ச்சி வயப்பட்டோ நடப்பதில்லை. முன்பெல்லாம் குடும்ப மானம் போகுதே என்ற ஆத்திரத்தில் சில குடும்பங்கள் கொலைசெய்வார்கள். அது அரசியலாக்கப் பட்டதில்லை. குறிப்பாக 70-80 காலகட்டங்களில் இப்படி வன்முறையை நிகழ்த்தும், ஆணவக் கொலைகளை கையி லெடுக்கும் சாதி சங்கங்களும் இல்லை. குறிப்பாக 2013ல் பாமக நாடகக் காதல் என்று சொல்லிக் கொண்டு தலித் விரோத அரசியலைக் கையிலெடுத்தபின் தமிழகம் முழுதுவதிலும் சாதிமீறிய காதலர்கள், இணையர்கள் கொல்லப்படுவது, அச்சுறுத் தப்படுவது அதிகரித்திருக்கிறது. குறிப்பாக சாதி சங்கங்கள் இதற்கு காரணமாகின்றன. அரசியல் ஆதாயத்திற்காகப் பிற்போக்குத் தனமான சாதிவெறி உணர்வுக்கு தீணி போட்டு பல இடங்களில் தலித் மக்கள் மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. தரும புரியில் 3 கிராமங்கள் எரிக்கப்பட்டதும் நீதி மன்றம் சாதிய மன்றமாகியதால் திவ்யா, இளவரசன் பிரிக்கப்பட்டு, இளவரசன் கொல் லப்பட்டதும், உடுமலை சங்கர், சேலம் கோகுல் ராஜ், கரூர் ஹரிகரன் (நாவிதர்), பொன்னேரி கெளதமன் (வன்னியர்) எனப் பெற்ற பிள்ளையையே துடிதுடிக்க கொல் லும் சாதிய வன்மங்கள் தற்போது வளர்ந் திருப்பதே ஆபத்தானது. கொலை செய்த குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் கொலையைத் தூண்டி ஆதாயம் அடையும் சாதியக் கும்பல் குற்றத்திலிருந்து தப்பித்து விடுகிறது. அந்தந்த சாதிகளின் கல்வி வளர்ச்சிக்கும் முன்னேற்றத் திற்கும் பாடுபட்ட சாதி சங்கங்கள் இருந்த தொரு காலம், ஆனால் இன்றோ அருகில் வாழும் விளிம்புநிலை மக்களை சாதியின் பெயரில் தாக்குவதன் மூலம் அவர்களின் சொத்துக்களை அழித்து தங்களை தக்க வைத்துக் கொள்ளவே நினைக்கிறார்கள் சாதி சங்கத் தலைவர்கள்.

அதேபோல் இன்று பாஜக இந்துமுன்னணி போன்ற மதவெறி அமைப்புகளும் இணைந்து ஆணவக் கொலைகளை சாதி திரட்சியை செய்து வருகின்றன.

## கொலைகள் தற்கொலைகளாக மாற்றப்படுதல்

அண்மையில் நடக்கும் ஆணவக் கொலை களில் பல கொலைகள் தற்கொலைகளாக மாற்றப்படுவது நடக்கிறது. அவற்றிலும் தலித் இளைஞர்கள், பிற்படுத்தப்பட்ட, மிக பிற்படுத் தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த இளம்பெண்களே அதிகம். தற்கொலையாக மாற்றப்படும் இத்தகைய வழக்கிற்கு குடும்ப உறவினர்கள், காவல் துறை அதிகாரிகள், சாதி சங்கங்கள் முதன்மைக் குற்றவாளிகளாக இருக்கி றார்கள். உதாரணம், கடலூர் அரிபரந்தாமன், தருமபுரி இளவரசன், விருத்தாச்சலம் திலகவதி, விழுப்புரம் சரசுவதி, பொன்னேரி கௌதமன் போன்ற ஏராளமானோரின் கொலைகளாகும். இவை தற்கொலைகளாக வழக்குப் பதிவு செய்யப்படுகின்றன. நடக்கும் ஆணவக் கொலையை மூடிமறைப்பதிலும் குற்றவாளி களைப் பாதுகாப்பதிலும் சட்டமும் காவல் துறையும் சாதிவெறிக்கு சாமரம் வீசிக் கொண் டிருக்கிறது. சட்டம் வயதுவந்த இருவரின் திருமண உரிமையை வலியுறுத் தினாலும் அதனை நடைமுறைப்படுத்தும் நிர்வாக அதிகாரிகளின் சாதிய சிந்தனைப் போக்கால் சட்டமும் சனநாயகமுமே கேள்விக் குறியாகி ருப்பதன் விளைவே ஆணவக் கொலைகள் அதிகரித்து இருப்பதாகும்.

இதுபோன்ற சாதி சங்கங்கள், சாதிக் கட்சிகள் வளருவதால் ஏற்படும் இன்னொரு ஆபத்தான போக்கு என்னவென்றால், சாதி மறுத்த இணையர்களை ஏற்றுக் கொள்ளும் இருதரப்புக் குடும்பங்களை துன்புறுத்துவது, ஊர் பஞ்சாயத்துகள் மூலமும் சாதி சங்கங்கள் மூலமும் ஒதுக்கி வைப்பது, மிரட்டுவது, தற்கொலைக்கு தூண்டுவது போன்ற சாதி வெறுப்புக் குற்றங்கள் அதிகரிக்கின்றன. சமூக மாற்றங்களை ஏற்றுக் கொண்டு வாழும் சனநாயக குடும்பங்களை வாழ விடாமல் சித்ரவதை செய்யும் இத்தகைய சாதியக் கும்பல் எந்த இடத்திலும் தண்டிக்கப் படுவதில்லை.

சாதி ஆணவக் கொலைகள் என்பது முன்பு தலித் மற்றும் தலித் அல்லாத சாதிகளுக் கிடையில் நடந்தது. தற்போது பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்குள்ளும் ஆணவக் கொலைகள் நடக்கின்றன. சில ஆணவக் கொலைகளும்

தாக்குதல்களும் ஒடுக்கப்பட்ட சாதிகளான பள்ளர் பறையர், அருந்ததியர் சாதிகளுக் கிடையிலும் நடக்கின்றன. காரணம் மக்க ளிடம் செல்வாக்கு இழந்த கட்சிகள் தங்களுக் கான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்ள பிற்போக்குத்தனமான சாதியை கையிலெடுக் கிறார்கள். புதிய புதிய வட்டார அளவிலான சாதி சங்கத் தலைவர்கள் மக்கள் ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கில் பல வன்முறைக் கலவரங்களை நடத்துவது அரசியல் பேரத்திற் காகவும் சாதி வலிமையை காட்டி சீட்டு வாங்கவுமே சுய நலமிக்க பிழைப்பு வாதிகள் தலித் மக்கள் மீதான தாக்குதலை, சூறை யாடலை, ஆணவக் கொலையை நடத்துகி றார்கள். அரசு இதனை வேடிக்கைப் பார்க்கிறது.

### வரலாற்றுச் சிறப்புமிக்க நீதிமன்றத் தீர்ப்புகள்

தமிழ்நாட்டில் நடந்த ஆணவக் கொலை களில் ஒரு சில கொலைவழக்குகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டி ருக்கிறார்கள். பல வழக்குகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. தற்போது தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக கண்ணகி முருசேகன் மற்றும் கோகுல்ராஜ் சாதி ஆணவக்கொலை வழக்கு களில்தான் காவல் அதிகாரிகளும் சாதி சங்க தலைவன் யுவராஜும் தண்டிக்கப்பட்டிருப்பது நடந் துள்ளது. இவை வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த தீர்ப்புகளாகும். இதுபோன்ற பல ஆணவக்கொலை வழக்குகளை விரைவாக நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் குற்றங்களை கட்டுப்படுத்திட முடியும். அரசு அதற்கு முனைப்புக் காட்டுவதில்லை. பாதிக் கப்பட்ட மக்கள் போராடினால் உடனடியாக 144 தடை உத்தரவை விதித்து அடக்கு முறையை ஏவுகிறது. ஆனால் வன்முறை செய்யும் சாதிய மதவாதிகளுக்கு எந்தக் கட்டுபாட்டையும் விதிப்பதில்லை. அரசே சாதிய சார்பாகத்தான் நடக்கிறது. நீதியை மக்கள் போராடித்தான் பெற வேண்டியிருக்கிறது.

### சிறப்புத் திருமணச் சட்டம் 1954

சிறப்புத் திருமணச் சட்டம் 1954 (Special Marriage Act, 1954) இல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய அம்சமான சாதி, மதம் கடந்து திருமணம் செய்து கொள்ள விரும் புபவர்கள் இச்சட்டத்தின் கீழ் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளலாம். இன்றும் நூற்றுக் கணக்கான சாதி மறுப்புத் திருமணங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

சுயமரியாதைத் திருமணச்சட்டம்: தமிழ் நாட்டில் சடங்குகள், புரோகிதர், தாலி, அக்னி, சப்தபதி இல்லாத சுயமரியாதை திருமணங்கள் செல்லும் என்று அறிஞர் அண்ணா முதல் வராக இருந்தபோது 1967ல் இச்சட்ட வரைவு கொண்டுவந்து பின் 1968ல் அதனை சட்ட மாக்கினார்.

### இராஜஸ்தான் மாநில அரசு இயற்றிய சிறப்புச்சட்டம் -2019

கடந்த 2019ஆம் ஆண்டு, இராஜஸ் தான் மாநில காங்கிரசு அரசு, "THE RAJASTHAN PROHIBITION OF INTERFERENCE WITH THE FREEDOM OF MATRIMONIAL ALLIANCES IN THE NAME OF HONOUR AND TRADITION BILL, 2019" திருமண விருப்பங்களின் சுதந்திரத்தில், பெருமை, பாரம்பரியத்தின் பெயரால் தலையிடுவதைத் தடை செய்யும் ராஜஸ்தான் அரசின் சட்டம் 2019 என்கிற சட்டத்தை இயற்றியுள்ளது. இந்தியாவிலேயே ஆணவக் கொலைகளுக்கு எதிரான தனிச்சட்டம் இயற்றிய மாநிலம் ராஜஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கொடூர ஆணவக் கொலையை சாதி வெறுப்புக் குற்றங்களைத் தடுத்திட தமிழக அரசு சிறப்புச் சட்டத்தை இயற்ற வேண்டும். சமூக நிதி, சாதி எதிர்ப்பு, தமிழர் உரிமை போன்ற போராட்டங்களின் அடை யாளமாக திகழும் தமிழ்நாட்டில் சாதி மாறி காதலித்த காரணத்திற்காகவே கொல்லப் படுவது வெட்கப்படவேண்டிய ஒன்று. பின்னோக்கி நகரும் சாதிய மனோபாவத்தை மடைமாற்றிட வேண்டும். அழுத்தமான கருத் தியல் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அனைத்து சாதியும் கலப்புச் சாதிகளே என்பதை உரக்கப் பேசுவோம். சமத்துவத்தை சாதி மறுத்த தமிழர் ஒற் றுமையை உருவாக்க வேண்டுமென்றால் சாதி தீண்டாமை எதிர்ப்பை, சாதி ஒழிப்பை உரக்கப் பேசியாக வேண்டும். அதற்கு அணியமாவோம்.

**"தமிழ்த்தேசிய வரலாற்றில் சமரசத்தையும், சரணாகதியையும் வீழ்த்தி விடுதலை அரசியலைக் கட்டமைத்த தலைவன்"**



**- தமிழரசன்**

# ‘நீட்’ நுழைவும் - தமிழ்நாட்டு மாணவர் வெளியேற்றமும்

## ‘நீட்’ தேர்விற்கு எதிரான தமிழ்நாடு மாணவர்கள்

**தூ**ரத்தை காரணமாக காட்டி கல்வி மறுக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக 3 கிலோமீட்டருக்கு ஒரு தொடக்கப்பள்ளி 5 கிலோமீட்டருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி அமைத்தது தமிழ்நாடு அரசு. அந்த தூரங் களையும் பயண வசதி இல்லை என்கிற காரணத்திற்காக மிதிவண்டியும் பேருந்தில் பயணம் செய்ய இலவச பாஸ்-யும் வழங் கியது தமிழ்நாடு அரசு. பசியினை காட்டி கல்வி மறுக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக கல்விக்கூடங்களில் மதிய உணவு திட்டங் களை அமுல்படுத்தியது தமிழ்நாடு அரசு. புத்தங்கள் வாங்க பணம் இல்லை என்கிற காரணத்திற்காக கல்வி மறுக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக புத்தகங்களை தானே அச்சடித்து விநியோகித்தது தமிழ்நாடு அரசு.

கல்விதான் ஒருவரை தன் வாழ்வில் முன்னேற்றும் கருவி. அந்த கல்வி இப்படி எந்த சூழலிலும் எந்த காரணம் கொண்டும் ஒருவருக்கு மறுக்கப்பட்டு விடக்கூடாது என்கிற நோக்கில் பார்த்து பார்த்து கட்ட மைத்தது தான் தமிழ்நாட்டின் இன்றைய கல்வி வளர்ச்சி. 37,431 அரசு பள்ளிகள், 834 உதவி பெறும் பள்ளிகள், 146 அரசு கலை அறிவியல் கல்லூரிகள், 14 அரசு சட்ட கல்லூரிகள், 21 பல்கலை கழகங்கள், 39 அரசு மருத்துவ கல்லூரிகள், 7 மாற்று மருத்துவ கல்லூரிகள் என இது விரிவடைகிறது.




தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதம் 86.81. இது மொத்த இந்தியாவின் கல்வியறிவு விகிதத்தை விட அதிகம். இப்படி பார்த்து பார்த்து உருவாக்கிய கட்டமைப்பை தான் இன்று புதிய கல்விக் கொள்கை, தேசிய கல்விக் கொள்கை, நீட் நுழைவுத் தேர்வு, பல்கலை கழகங்களை இந்திய அரசதிகாரத் திற்கு எடுத்து செல்லுதல், இட ஒதுக்கீட்டை ரத்து செய்தல் என்று ஒரே நாடு ஒரே தேர்வு என்கிற நோக்கில் கல்வி மீதான நமது உரிமை களையும் அதிகாரங்களை பறித்துக் கொண் டுள்ளது இந்திய அரசு.

காலங்காலமாக உரிமை மறுக்கப்பட்டு வந்த அனைத்து தரப்பினருக்குமான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க ஆரம்ப நிலை யிலிருந்து கட்டமைத்த கட்டமைப்பை தகர்த்து இன்று அவர்களுக்கெல்லாம் வாய்ப் பினை மறுக்கும் வகையில் கல்விக் கொள்கை களை வகுத்துக் கொண்டிருக்கிறது இந்திய அரசு. கரையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்தது போல நமது கல்வி கூடங்களில் இந்தியத்தின் அதிகாரம் தலை விரித்தாட தொடங்கியிருக்கிறது.

‘நீட்’ தேர்வானது வெறுமனே கல்வி சிக்கலாக மட்டுமே இல்லை. அது தமிழ் நாட்டின் சுகாதார கட்டமைப்பையும் சீர்க் குலைப்பதாகவே இருக்கிறது. மேலும் கல்வி குறித்தான தமிழ்நாட்டு அரசின் அதிகாரத் தையும் உரிமையையும் பறிப்பதாகவும் அமைகிறது. ஏற்கெனவே IIT, IIM, AIMS போன்ற கல்வி நிலைய சேர்க்கைக்கும் ARCHI-TECT போன்ற படிப்புகளுக்கு தனியே நடத்தப் படும் NATA போன்ற நுழைவுத் தேர்வுகளால் புறக்கணிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மாண வர்களின் நிலையை இன்று மருத்துவ கனவு காணும் கிராமப்புற ஏழை எளிய மாணவர் களுக்கும் ஏற்படுத்தியுள்ளது நீட் நுழைவு

தேர்வு. அதனை மேலும் விரிவுப்படுத்தி நர்சிங் மற்றும் உயிரியல் அறிவியல் (LIFE SCIENCE) படிப்புகளுக்கும் நடத்தப்படும் என்று கடந்த ஆண்டு அறிவித்து இருக் கிறது. நீட் நுழைவு தேர்வினை தனியார் கோச்சிங்கில் சேர்ந்து தான் தேர்ச்சி பெற முடியும் என்கிற நிலையை ஏற்படுத்தி நம் மாணவர்களின் 12 ஆண்டு கால பள்ளி வாழ்க்கையை பாழ்படுத்தி யுள்ளது இந்திய அரசு.

அனிதா (அரியலூர்), பிரதீபா (விழுப்புரம்), சுபஸ்ரீ (திருச்சி), ஏஞ்சலின் (சென்னை). அருண் பிரசாத் (கடலூர்), சிவசங்கரி (புதுச்சேரி), மோனிஷா (விழுப்புரம்), ரிதுஸ்ரீ (திருப்பூர்), வைசியா (தஞ்சாவூர்), கீர்த்தனா (பெரம்பலூர்), தனலட்சுமி (நெல்லை), ஹரிஷிமா (புதுக்கோட்டை), சுபஸ்ரீ (கோவை), விக்னேஷ் (அரியலூர்), ஜோதி துர்கா (மதுரை), ஆதித்யா (தருமபுரி), மோதிலால் நாமக் கல்), தனுஷ் (மேட்டூர்), கீர்த்திவாசன் (கோவை), சௌந்தர்யா (வேலூர்), கனி மொழி (அரியலூர்), சுபாஷ் (சேலம்) மற்றும் ஜெயா (நீலகிரி) ஆகிய 23 மாண வர்கள் 12-ஆம் வகுப்பில் நல்ல மதிப் பெண்கள் பெற்றும் நீட் நுழைவுத் தேர் வினால் இரக்கமில்லாமல் கொல்லப்பட்டவர் களின் பட்டியல். மேலும் மாணவன் கஸ்தூரி மாகாலிங்கத்தின் தந்தை கிருஷ்ணசாமி அவர்களும் மரணமடைந்திருக்கிறார்.

நீட் தேர்வினால் தமிழ்நாட்டு கிராமப்புற ஏழை எளிய அரசுப்பள்ளி மாணவர்களின் மருத்துவ கனவு கலைந்து கொண்டிருப்பதை அறிந்த தமிழ்நாடு அரசு 7.5% இடஒதுக்கீடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அளித்து ஓரளவுக்கு நம்பிக்கையளித்தது. ஆனால் அந்த 7.5% இட ஒதுக்கீட்டுக்கான தமிழ்நாட்டு அரசின் தீர்மானத்தையும் ஆளுநர் உடனே ஏற்காமல் காலம் தாழ்த்தியதையும், தமிழ்நாடு அரசு அத்தீர்மானத்தை அரசிதழில் வெளி யிட்ட பின்பு ஆளுநர் அதனை ஏற்றதையும் பார்க்கையில் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வியை தடுப்பதற்கான வழி முறைகளை தான் இந்திய அரசு கொண்டிருந்ததை அறியலாம். தற்பொழுது இந்த 7.5% சதவீத இடஒதுக்கீட்டையும் தடை செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே 69 இட ஒதுக்கீட்டினை நீக்க வேண்டும் என்று தொடர்ந்து சண்டையிட்டு வரும் இந்திய அரசு இந்த இடஒதுக்கீட்டையும் எப்பொ ழுது தடை செய்யும் என்கிற நிலையற்ற தன்மையே நிலவுகிறது.

மருத்துவம் படிப்பதற்கு 12 ஆண்டுகள் பள்ளிப்படிப்பு உதவாமல் நுழைவுத்தேர்வு தான் தீர்மானிக்கும் என்றால் பள்ளிக் கல்வியின் நிலையை கேள்விக்குறியாக்கும் இந்திய அரசின் போக்கு மொழிவழி தேசிய இனங்களின் கல்வி உரிமை மீதான நேரடி போராகத் தான் தமிழ்நாட்டு மக்கள் அணுக வேண்டும்.

நீட் எனும் அயோக்கியத்தன தேர்வினை துவக்கம் முதல் எதிர்த்து வந்த தமிழ்நாட்டு அரசின் நிலைப்பாட்டையும், விலக்கு கேட்டு போடப்பட்ட தீர்மானத்திற்கு பாசிச இந்திய அரசு, "நாடு முழுவதும் தகுதியான மருத்து வர்களை உருவாக்க நீட் தேர்வு அவசியம்" என்று கூறி எட்டுக்கோடி மக்கள் பிரதிநிதி களின் முடிவை குப்பையில் எறிந்தது. மீண்டும் இரண்டாம் முறையாக தமிழ்நாடு சட்டமன்றம் நீட் விலக்கு தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநரின் கையொப்பத்திற்காக அனுப்பி கையெழுத்து போடும்படி இருந்துக் கொண்டிருக்கிறோம்.

இலட்சக்கணக்கான ரூபாய்கள் செல வழித்து கோச்சிங் சென்டர்களில் படித்து எழுதும் நீட் தேர்வு தான் தகுதியான மருத் துவர்களை உருவாக்கும் என்றால், இத் தனை வருடங்களாக எங்களது அரசு பள்ளிகளில் படித்த மாணவர்கள் தானே தமிழ்நாட்டினை மருத்துவ வசதியில் இந்திய ஒன்றியதிலேயே முதலிடத்தில் நிறுத்தி இருக்கிறது. மேலும். தமிழ்நாடு தானே 2600 ஆரம்ப சுகாதார நிலையங்கள் எனும் கட்டமைப்பை ஏற்படுத்தி அனைவருக்குமான சுகாதாரத்தை உறுதி செய்துள்ளது. இவர்கள் உயர்வாக பேசக் கூடிய இந்தி மொழி மாநிலங்கள் இதில் பின்தங்கி தானே இருக்கிறது.

பன்னாட்டு, இந்திய பெரு நிறுவனங்களின் கோச்சிங் சென்டர்களின் வளர்ச்சியை வைத்து நீட் பின்னால் உள்ள மருத்துவக்கல்வி மாபி யாவை நாம் அம்பலப்படுத்த வேண்டும். சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற மாநகரங்களில் முளைத்து வந்த இந்த நிறுவ னங்கள் இன்று கிராமங்கள் வரை தனது கிளைகளைப் பரப்பி தமிழ்நாட்டு பொருளா தாரத்தை மட்டுமல்லாமல் மாணவர்களின்

மருத்துவ கனவினையும் கொள்ளையடித்துக் கொண்டு இருக்கிறது. நீட் என்னும் தேர்வை பணக்காரர்களுக்கானதாக மாற்றிவிட்டு அன்றாடம் உழைக்கும் மக்களின் பிள்ளைகள் மருத்துவக் கனவுகூட காணமுடியாத கொடூரத்தை செய்து வருகிறது.

கிராமப்புற, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கு பள்ளிக்குச் செல்வதே பெரும் போராட்டமாக இருக்கும் காலத்தில் இவர்கள் கூடுதல் தொகைக் கொடுத்து கோச்சிங் சென்டர்களுக்கு சென்றால்தான் மருத்துவம் படிக்க முடியும் என்ற நிலையை திட்டமிட்டு உருவாக்கியுள்ளது. மேலும், அத்தகைய மாணவர்களில் சிலர் குடும்ப உழைப்பை கோச்சிங் சென்டர்களுக்கு செலவிட்டு தேர்வினை முறையாக எதிர் கொண்டும் போதிய மதிப்பெண் பெறாதது மாணவர்களின் தற்கொலைகளை நிறுவனப்படுத்தி வருவதும் நீட் தேர்வு தான். இது தேசிய இனங்களின் உயர்கல்வி உரிமைகளுக்கு விழுந்த சம்மட்டி அடி மட்டுமில்லாது, மாணவர்கள் மேல்நிலை வகுப்பில் பெறும் மதிப்பெண்ணும் நுழை வுத் தேர்வுகளில் பெறும் மதிப்பெண் வித்தியாசம் இவர்களை ஒருவித உளவியல் பாதிப்பிற்கு ஆளாக்கியும் வருகிறது.

டெல்லி அரசின் அறிவுரை கேட்டுதான் தமிழ்நாடு அரசு செயல்பட வேண்டும் என்ற அறியாமை மனநிலையில் தமிழர்கள் இல்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு எது தேவையோ அதுவே நமது சட்டமாக இருக்கவேண்டும். அதனை யார் ஒருவரும் ஏற்றாக வேண்டும். எட்டுக்கோடி மக்களின் கூட்டு மனசாட்சியாக சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதனை ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பி அவர் ஏற்கும் வரை தமிழ்நாட்டு மாணவர்கள் காத்துக்கிடக்க வேண்டும் என்ற நிலை தமிழ்நாட்டு மக்களின் மீது உரிமை சார்ந்த பலியிடமாக ஆளுநர் மாளிகை தொடர் வதை இனிமேலும் நாம் பொறுத்துக் கொள்ள முடியாது. மேலும், தமிழ்நாட்டு கல்வி நிலையங்களுக்கு சற்றும் தொடர்பில்லாத ஆளுநரை பல்கலைகழக வேந்தராக நியமிப்பதையும் தடை செய்ய வேண்டும்.

கல்வி குறித்தான அனைத்து உரிமைகளையும் அதிகாரங்களையும் பிடுங்கி தன்னிடத்திலே வைத்துக் கொண்டு கல்வியில் அயல்நாட்டு முதலீட்டையும், பெருமளவிலான தனியார் தலையீட்டையும் அனுமதிக் கிறது. நீட் நுழைவுத் தேர்வினை நடத்தும் நிறுவனம் கூட ஒரு தனியார் நிறுவனம் தான். மேலும், தமிழ்நாடு காலங்காலமாக கட்டமைத்த கல்லூரிகள், பல்கலை கழகங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களை இந்தி யாவின் அதிகாரத்திற்கு கொண்டு சென்று அதிலே இந்திய அளவிலான சேர்க்கைகளை நடத்த தீர்மானிக்கிறது. இதனால் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி கனவானது களவாடப்படுகிறது.

நீட் நுழைவுத் தேர்விற்கு எதிராக தமிழ்நாடு அரசின் தீர்மானத்தை தமிழ்நாட்டு அரசின் கொள்கை முடிவாக ஏற்கமறுக்கும் ஆளுநரிடம் எத்தனை முறை தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டாலும் அதனை ஆளுநரோ, இந்திய அரசோ ஏற்பதற்கு தயாராக இல்லை. ஆகவே, மொழிப்போரின் எழுச்சி இந்தி திணிப்பை தமிழ்நாட்டில் இருந்து விரட்டியடித்தது போல, மண்டல் கமிசன் எழுச்சி 69 இட ஒதுக்கீட்டை உறுதிச்செய்தது போல, தை எழுச்சி தமிழ்நாட்டு பண்பாட்டு விளையாட்டான ஜல்லிக்கட்டு தடையை உடைத்தது போல மீண்டும் ஒரு மாணவர் எழுச்சியே நீட் படுகொலைகளை தடுத்து நிறுத்தி கல்வி மீதான தமிழ்நாடு உள்ளிட்ட தேசிய இனங்களின் இறையாண்மையை நிலை நிறுத்தும்.

**மாணவர்களே, இளைஞர்களே......**

- மறுக்கப்படும் கல்வி உரிமைகளுக்கு எதிராக தமிழ்நாட்டு மாணவர்களாய். இளைஞர்களாய் ஒன்று திரள்வோம்!
- நீட் விலக்கு உள்ளிட்ட அனைத்து தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையில் இந்தியாவின் ஆதிக்கப் போக்கை வேரறுப்போம்! தமிழ்நாட்டு மாணவர்கள் மற்றும் மக்களின் உரிமைகளில் தமிழ் நாட்டு அரசை அதிகாரப்படுத்துவோம்!
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டு அரசின் செயல்பாடுகளை முடக்கிக் கொண்டிருக்கும் ஆளுநர் அலுவலகம் உள்ளிட்ட இந்திய நிறுவனங்களை முற்றுகையிடுவோம்!
- தமிழ்நாட்டின் கல்வி வளங்களை புதிய கல்வி கொள்கை மூலம் கபளீகரம் செய்ய துடிக்கும் இந்துத்துவ இந்திய அரசின் அடாவடித்தனத்தை விரட்டியடிப்போம்!

# காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணையும், தமிழ்நாடு சட்டமன்றத் தீர்மானமும்



❑ பாரி

**2022-2023** ஆம் ஆண்டிற்கான கர்நாடகாவின் நிதிநிலை அறிக்கையில் 2022 மார்ச் -ல் காவிரியின் குறுக்கே மேகேதாட்டில் (மேகதாது)அணைக்கட்ட மொத்தம் மதிப் பீடான ரூ.9,000 கோடியில் இவ்வாண்டு ரூ.1000 கோடியை கர்நாடக அரசு ஒதுக்கி யுள்ளது. இது 1892 மற்றும் 1924 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டிஷ் இந்தியாவில் போடப்பட்ட ஒப்பந்தங்களுக்கும், மேலும் 1974 மற்றும் 2007 ஆகிய ஆண்டுகளில் சுதந்திர இந்தியாவில் போடப்பட்ட ஒப்பந்தங் களுக்கும் எதிரானதாகும். கர்நாடக அரசின் செயலானது காவிரி ஒப்பந்தங்களுக்கு எதிரானது மட்டுமன்று, 1956 மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தகராறு சட்டம், உச்ச நீதிமன்ற வழிகாட்டல்கள், உலகில் பின் பற்றப்படும் நதிநீர் சிக்கல் தொடர்பான சட்டங்களுக்கும் எதிரானதாகும்.காவிரியில் "தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு தண்ணீர் தர முடியாது" என்பதே கர்நாடக அரசின் நிலைப்பாடு.

"காவிரியின் குறுக்கே மேகேதாட்டிலோ அல்லது காவிரியின் வேறு எந்தப் பகுதி யிலோ தமிழக மற்றும் இந்திய ஒன்றிய அரசின் அனுமதி இன்றி கர்நாடக அரசு அணைக்கட்டக் கூடாது" என தமிழ் நாடு சட்டப் பேரவையில் அனைத்துக் கட்சிகளின் துணையுடன் ஒரு மனதாக தீர்மானம் 2022 மார்ச் 21 ஆம் நாள் தி.மு.க. அரசால் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை இந்திய ஒன்றிய அரசோ அல்லது கர்நாடக அரசோ கண்டு கொள்ளப் போவ தில்லை. கர்நாடக அரசின் மேகேதாட்டு அணைத் திட்டத்திற்கு எதிராக ஏற்கனவே தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1982, 2014, 2015, 2019 ஆகியஆண்டுகளில் இது போன்ற தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஏப்ரல் 2014 'குமுதம் ரிப்போர்டர்' குறிப் பிடுகிறது.

1968 - 1980க்கு இடைப்பட்ட ஆண்டு களில் இந்திய அரசின் இசைவு இன்றி, இந்திய அரசின் நீர்வளத்துறை மத்திய நிர்வாக ஆணையம் இவற்றில் அனுமதி இன்றி, இந்திய அரசின் காடுகள் மற்றும் சுற்றுச்சூழல் துறை யின் தடையில்லாச் சான்று பெறாமலேயே, இந்திய அரசின் திட்டக்குழுவின் அனுமதி யின்றியே, காவிரி நதியின் 1892, 1924 ஆகிய ஒப்பந்தங்களுக்கு எதிராக கர்நாடக அரசின் மாநில நிதியலிருந்தே கபினி அணை, ஏரங்கி அணை, ஏமாவதி அணை, யாகாச்சி மற்றும் சுவர்ணவதி ஆகிய ஐந்து அணைகளை சட்டத்திற்குப் புறம்பாக கர்நாடக அரசு கட்டியுள்ளது. இது குறித்து இந்திய அரசோ,

நீதித்துறையே கேள்வி எழுப்ப வில்லை. அந்தத் துணிவு தான் மேகேதாட்டில் அணைக் கட்ட கர்நாடக அரசு திட்டம் போட்டு செயல் படுத்தி வருகிறது.

### காவிரி சிக்கலும், காவிரி ஒப்பந்தங்களும்

காவிரி குடகு தேசிய இன மக்களின் தாயகமான தலைக்காவேரி என்ற இடத்தில் உருவாகி தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினம் அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது. தலைக்காவேரி என்ற இடத்தை தலக்காவேரி என்று குடகிலும், கன்னடத்திலும் அழைக் கிறனர். குடகு என்பது கர்நாடகாவின் ஒரு மாவட்டமாக உள்ளது.குடகு மொழி பேசும் மக்கள் தனியான ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர். இந்திய உருவாக்கத்திலிருந்து குடகு இன மக்கள் தங்களுக்கு தனியாக மாநிலம் வேண்டும் எனத் தொடர்ந்து போராடி வருகின்றனர். காவிரி குடகு தேசிய இனத் தாயகத்தில் தோன்றினாலும் அதன் பயன் பாட்டு உரிமையாளர்களாக முதன்மையாக தமிழர்கள் (தமிழ்நாடு - புதுச்சேரி) கன்ன டர்கள், குடகினர், மலையாளிகள் ஆகிய நான்கு தனித் தனியான தேசிய இனத்தினர் பரம்பரை உரிமை பெற்றவர்களாக உள்ளனர்.

காவிரிச் சிக்கலானது தமிழ்நாட்டிற்கும், கன்னடர்களுக்கும் மன்னர்களது ஆட்சிக் காலத்திலிருந்தே நீடித்து வருகிறது. கி.பி 1141 முதல் 1173 வரை கர்நாடகத்தை ஆட்சி செய்த போசள நாட்டு அரசன் முதலாம் நரசிம்மன் காவிரியின் குறுக்கே செயற்கை மலைகளை அமைத்து தமிழகம் வரும் தண்ணீரைத் தடுத்தான். சோழ நாட்டை ஆண்ட இரண்டாம் இராசராசன் பெரும் படையுடன் போசள நாட்டின் மீது போர் தொடுத்து முதலாம் நரசிம்மனைத் தோற் கடித்து அணையை உடைத்து காவிரியை மீட்டான். 17ஆம் நூற்றாண்டில் மைசூர் மன்னன் சிக்க தேவராயன் காவிரியின் குறுக்கே அணைக்கட்டி நீரைத் தடுத்தான். வெகுண் டெழுந்த மதுரை ராணி மங்கம்மாள் திரட்டிய படையும், தஞ்சையை ஆண்ட மராட்டியப் படையும் அந்த அணையை உடைக்க மைசூரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றன. அதற்குள் தானகவே வெள்ளம் வந்து அணை உடைந்து விட்டது. மன்னர்களது ஆட்சிக் காலத்தில் காவிரிச் சிக்கல் இவ்வாறுதான் தீர்க்கப்பட்டது. திப்புசுல்தான் சீரங்கப்பட் டினம் அருகே காவிரியில் குறுக்கே அணைக் கட்ட அடிக்கல் நாட்டியுள்ளார். ஆனால் அணைக் கட்டப்படவில்லை.

### 1892 காவிரி ஒப்பந்தம்

“மைசூர் அரசின் பாசனப் பணிகள் - சென்னை மைசூர் ஒப்பந்தம் 1892” என்ற ஒப்பந்தம் முதன்முதலாக தமிழ்நாட்டிற்கும், கர்நாடகாவிற்கும் இடையே போடப்பட்டது. இதன்படி மைசூர் அரசின் முதன் மையான ஆறுகள் A அட்டைவணையிலும், சிறிய ஓடைகள் மற்றும் நீர்ப்பிடிப்புகள் B மற்றும் C அட்டவணையிலும் சேர்க்கப்பட்டன. காவிரி மற்றும் 14 ஆறுகள் A அட்டவணையில் சேர்க்கப்பட்டன. ஒருவேளை அணைகள் கட்ட மைசூர் அரசு திட்டமிட்டால் அதனை சென்னை அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறவேண்டும்.இரு தரப்பினருக்கும் சிக்கல் எழுந்தால் அதனை இரு அரசாங்கங்களால் அல்லது இந்திய அரசால் நியமிக்கப்படும் நடுவர் மன்றங்கள் (தீர்ப்பாயங்கள்) முடிவுக்கு விட வேண்டும். சென்னை அரசு தனது பாசனத் திட்டங்களுக்கு பாதிப்பு வராத நிலையில் மைசூரின் புதிய திட்டங்களை மறுக்கக் கூடாது.1892ஆம் ஆண்டு ஏற்பட்ட காவிரி ஒப்பந்தமானது இரு தரப்பினரும் பல கட்டப் பேச்சு வார்த்தைகள், பலக் கடிதப் போக்குவரத்துகள் மூலமாக தங்களுக்கு இடையிலான பரம்பரை உரிமையை விட்டுக் கொடுக்காமல் ஏற்படுத்திக் கொண்டதாகும். இவ்வொப்பந்தம் மைசூரின் மன்னராட்சியில் மைசூர் பிரித்தானிய நிர்வாகமும்,பிரித்தானிய இந்திய அரசும் செய்து கொண்டதாகும். சென்னை மாகாணம் பிரித்தானிய இந்திய அரசின் கீழ் இருந்தது. இவ்வொப்பந்தம் உலக நாடுகளில் நதிநீர் தொடர்பாக நாடுகளுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந் தங்களுக்கு இணையாகவே கருதப்படுகிறது. மத்தியிலும், கர்நாடகாவிலும், தமிழ்நாட்டிலும் அறம் சார்ந்த கொள்கைளைப் பின்பற்றினால் ஒப்பந்தத்தில் எந்தச் சிக்கலும் இல்லை. காவிரிச் சிக்கல் வெறும் ஆற்று நீர் உரிமைச் சிக்கல் இல்லை. கர்நாடகாவில் உள்ள அனைத்துக் கட்சிகளும் “தமிழ் நாட்டிற்கு ஒரு சொட்டு தண்ணீர் தர முடியாது” என்பதிலி ருந்து; இது தேசிய இனங்களுக்கு இடை யிலான அரசியல் சிக்கலாக மாறிவிட்டது.

எனவே இந்திய பார்ப்பனபனிய முதலாளி வர்க்கம் தனது அரசியல் நலனுக்கு ஏற்ற வகையில் இதனைக் கையாளுகிறது. இதுவே சிக்கல் நீடிக்கக் காரணம்.

### 1924காவிரி ஒப்பந்தம்

1906-இல் மைசூர் அரசு காவிரியில் கண்ணம்பாடியில் கிருஷ்ணராஜசாகர் அணைக் கட்டத் திட்டம் போட்டது. கிருஷ்ணராஜசாகர் என்பது மைசூர் மன்னன் பெயர். இதே காலக்கட்டத்தில் சென்னை மாகாண அரசு மேட்டூர் அணைக் கட்டத் திட்டம் போட்டது. இவ்விரு அணைகள் கட்டுவதில் இவ்விரு அரசுகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்படாததால் பிரித்தானிய இந்திய அரசு இச்சிக் கலை 1913ல் அலாகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி எச்.டி.கிரிஃபின் அவர்களை தீர்ப்பாளராகச் கொண்ட நடுவர் மன்றத்திற்கு (தீர்ப்பாயத்திற்கு) விட்டது. சென்னை, மைசூர் அரசுகள் முறையே மேட்டூர், கண்ணம்பாடி அணைகளைக் கட்டிக் கொள்ளலாம் என்று 1914இல் தீர்ப்பாளர் ஆணை வழங்கினார். கண்ணம்பாடியில் அணைக்கட்டும் திட்டத்தை எதிர்த்து சென்னை அரசு பிரித்தானிய இந்திய அரசுக்கு மேல்முறையீடு செய்தது. இம் மேல்முறையீட்டை இந்திய அரசு நிராகரித்த பின் சென்னை அரசு இலண்டனில் உள்ள இந்திய அமைச்சரக்கு மேல்முறையீடு செய்தது. இதன்படி 1921-1924 வரை பல கட்டப் பேச்சு வார்த்தை நடந்துள்ளன. இறுதியில் 1924 பிப்ரவரியில் கிருஷ்ண ராஜசாகரில் அணைக் கட்டுவது பற்றி இரு தரப்பிற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. 1892 மற்றும் 1924 ஆகிய இரு ஒப்பந்தங்களையும் போட்டவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வொப்பந்தப்படியே கிருஷ்ணா ராஜசாகர், மேட்டூர் அணைகள் கட்டப்பட்டன.

1924இல் ஏற்பட்ட காவிரி ஒப்பந்தம் சென்னை-மைசூர் அரசுகள் காவிரியில் கடைபிடிக்க வேண்டி செயல்முறை விதிகளை வகுத்துத் தந்துள்ளது. அந்த விதிகளில் ஒன்று ஒப்பந்தம் செயலுக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் முடிந்தபின் அனுபவ வெளிச்சத்தில் மறு ஆய்வு செய்து சம்மந்தப்பட்ட அரசுகளின் எல்லைக்குள் மேலும் பாசனத்தை விரிவுப்படுத்துவது பற்றி ஆராய மைசூர் மற்றும் சென்னை அரசாங்கங்கள் ஒத்துக்



கொள்கின்றன. இவ்வாறான மறு ஆய்வுகள் மூலம் தக்க திருத்தங்கள் மற்றும் சேர்க்கைகள் செய்து கொள்ள அரசாங்கங்கள் பரஸ்பரம் ஒப்புக் கொள்கின்றன என்று 1924 ஒப்பந்தம் கூறுகின்றது. காவிரி ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்குப் பிறகு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பதை மட்டுமே கன்னடர்கள் பிடித்துக் கொண்டு 1924 ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று வல்லடி வழக்கு செய்கின்றனர்.

### சுதந்திர இந்தியாவும்; தமிழர்களின் காவிரி உரிமையும்

கன்னடர்கள் மொழிவாரி மாநிலம் கோரி போராடிய காலத்திலிருந்தே 1924 ஒப்பந்தத்தை எதிர்த்து வருகின்றனர். 1956 நவம்பரில் மொழிவாரி மாநிலம் அமைக்கப் பட்டு புதிய மைசூர் மாநிலம் (தற்போது கர்நாடகம்) உருவான உடனேயே இந்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்க கோரினர். இதற்காக அம்மாநில பொதுப் பணித்துறை அமைச்சர் சென்னை வந்து தமிழக முதல்வர் காமராசரை சந்தித்துப் பேசினார். காமராசர் கர்நாடகாவின் கோரிக்கையை ஏற்கவில்லை.

காவிரி சிக்கல் நீடிக்கும் போதே 1968க்குப் பிறகு கர்நாடக அரசு 1924 ஒப்பந்தங்களை மீறி சட்ட விரோதமான காவிரியின் குறுக்கே கபினி, ஏமாவதி, ஏரங்கி ஆகிய அணைகளைக் கட்டியது. இதனை எதிர்த்து 1971இல் தமிழ்நாடு அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கும், தஞ்சை மாவட்ட உழவர்கள் சார்பில் மன்னை நாராயணசாமி, முரசொலி மாறன் மற்றும் கருப்பையா மூப்பனார் ஆகியோர் தனித்தனியே மூன்று வழக்குகளும் போட்டனர். இவர்களோடு மன்னார்குடி

சீனிவாச ஐயங்காரும் உண்டு. இவரின் மகன்தான் மன்னை சீ.இரங்கநாதன்.

இதற்கிடையில் காங்கிரசு கட்சியில் பிளவு ஏற்பட்டது. அகில இந்திய காங்கிரசு தலைவரான கன்னட நிஜலிங்கப்பா விற்கும், காமராசருக்கும் எதிராக, கர்நாடகா விலுள்ள தேவராசு அர்சுவை வெற்றி பெறச் செய்வ தற்காக இந்திராவின் வேண்டுகோள்படி, இந்திராவுடன் தி.மு.க.தேர்தல் கூட்டணிக்காக கருணாநிதி 1971ல் உச்ச நீதிமன்றத்தில் போட்ட வழக்குகளை 1972இல் திரும்பப் பெற்றார். இச்செயலானது நடுவர் மன்றம் அமைக்க இருபது ஆண்டுகள் தள்ளிப் போக காரணமாக அமைந்தது.அதனை ஒட்டியே 1972இல் இந்திராவின் ஏற்பாட்டில் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி, கர்நாடக முதல்வர் தேவராசு அர்சு மற்றும் கேரள முதல்வர் அச்சுதமேனன் ஆகியோர் மத்திய வேளாண் மைத்துறை அமைச்சர் பாபு ஜெகஜீவன் ராம் தலைமையில் பேச்சு வார்த்தை நடத்தினர். அதன்படி காவிரி நீர் தொடர்பாக உண்மையை கண்டறியும் குழு 1972இல் அமைக்கப்பட்டது. அக்குழு காவிரியின் எல்லாப் பாசனப் பகுதி களையும் சுற்றிப்பார்த்து கணக்கீட்டு அறிக்கை கொடுத்தது. அவ்வறிக்கையை அடிப் படையாகக் கொண்டு ஜெகஜீவன்ராம் தலைமையில் 1974 ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. இவ்வொப்பந்தத்தையும் கர் நாடக அரசு ஏற்கவில்லை. கர்நாடக அரசு பேச்சு வார்தையில் ஈடுபட்டுக் கொண்டே சட்டத்திற்குப் புறம்பாக அணைகளையும், ஏரிகளையும், குளங்களையும் வெட்டிய துடன் பாசனப் பரப்பை விரிவுபடுத்தியது. காவிரி நடுவர் மன்றம் கோரி இரண்டாவது முறையாக தமிழகம் சார்பில் உச்ச நீதி மன்றம் செல்வதற்கு இடையே மாநில முதல்வர்கள் மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் 5 முறையும், அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு வார்தைகள் 18 முறையும் நடைபெற்றுள்ளன.எதனையும் கர்நாடக அரசு ஏற்கவில்லை.

இந்நிலையில் தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைப்பொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பை பொன்னுசாமி ரெட்டியார், மன்னார்குடி சீ.இரங்கநாதன் போன்றவர்கள் ஏற்படுத்தினர். அதன்மூலம் காவிரி நடு மன்றம் கோரி உச்சநீதிமன்றத்தில் 1983இல் மீண்டும் வழக்குத் தொடுத்தனர். 1986இல் இவ்வழக் கில் தமிழ்நாடு அரசும் இணைந்து கொண்டது.

**காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புகள்**

1990இல் உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசர் இரங்கநாத்மிசுரா தலைமை யிலான அமர்வு காவிரி நடுவர் மன்றத்தை ஒரு மாத காலத்திற்குள் அமைக்க நடுவணரசுக்கு கண்டிப்பான ஆணையை வழங் கியது. இதன்படி 1956 மாநிலங்களுக்கு இடையிலான ஆற்றுநீர் சிக்கல் தொடர்பான சட்டப்படி 1990ல் வி.பி.சிங் நடுவர் மன்றத்தை அமைத்தார்.

1990ல் தமிழ்நாடு மற்றும் புதுவை அரசுகள் இடைக்கால நிவாரணம் கேட்டும், 1972இல் முதலமைச்சர் கூட்டத்தின் முடிவு படியே எந்த மாநிலமும் தண்ணீரைத் பயன்படுத்தலாம் என்றும், தேக்கி வைக்க கூடாது என்றும் காவிரி நடுவர் மன்றத் திடம் விண்ணப்பித்தது. இடைக்கால நிவாரணம் வழங்க அதிகாரமில்லை என தமிழக, புதுவை மனுக்கள் காவிரி நடுவர் மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன. பிறகு தமிழகமும், புதுவையும் உச்சநீதி மன்றத்திடம் இடைக் கால ஆணை கேட்டன. உச்சநீதிமன்ற ஆணைப்படி காவிரி நடுவர் நீதிமன்றம் 1990ல் இடைக்காலத் தீர்ப்பும் 2007ல் இறுதி தீர்ப்பும் அளித்தது.

காவிரி நடுவர் மன்றம் தமிழ்நாட்டிற்கு எதிராக கர்நாடக அரசின் இழுவைக் கெல்லாம் வளைந்து சென்று இடைக்கால தீர்ப்பையும், 2007இல் இறுதி தீர்ப் பையும்அளித்தன.

பிரித்தானிய இந்தியாவில் 1892 மற்றும் 1924 காவிரி ஒப்பந்தங்களை எடுத்துக் கொள்ளமுடியாது என்றும்,தமிழ்நாடு பண்டைக் காலம் தொட்டு பெற்று வந்த மரபுரிமை, அனுபோக உரிமை, இரு மாநிலங்களுக்கிடையில் கடந்தகாலங்களில் பெறப்பட்ட கருத்தொற்றுமை எதனையும் காவிரி நடுவர் மன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது என்றும் கூறிவிட்டது. கர்நாடகம் கோரியபடி அப்போது நிலவும் சிக்கலின் தகுதி அடிப்படையில் தீர்ப்பு வழங்கியது. இது தமிழர்களின் காவிரி மீதான மரபுரிமையை கர்நாடகம் பறிக்கவும், கடந்த கால ஒப்பந்தங்களை மறுத்து வாதிடவும் வழிவகுத்துள்ளது.

***தொடரும்...***

## காசுமீர் ஃபைல்ஸ் திரைப்படத் திறனாய்வு

# பொய்த்திரை விரிக்கும் மெய்வலை

■ தியாகு

ஒரு திரைப்படத்துக்கு ஒரு மாநில அரசு வரிவிலக்குச் சலுகை வழங்குவது புதிய செய்தி அன்று. ஆனால் ஒரே திரைப் படத் துக்குப் பல மாநில அரசுகள் வரிவிலக்குச் சலுகை வழங்கு கின்றன. கோவா, குசராத், அரியானா, கர்நா டகம், மத்தியப் பிரதேசம், திரிபுரா, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் இவ்வாறு சலுகை வழங்குகின்றன. இவை அனைத்தும் பாரதிய சனதா கட்சி ஆளும் மாநிலங்கள். இந்த மாநி லங்களின் முதலமைச்சர்களும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது ஒவ் வொருவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படம் என்று விளம்பரமும் செய்கிறார்கள்.

அசாம், மத்தியப் பிரதேச மாநில அரசுகள் இந்தப் படத்தைப் பார்ப்பதற்கென்றே அரசு ஊழியர்களுக்கும் காவல் துறையினருக்கும் விடுமுறை கொடுத்து அனுப்புகின்றன. அசாம் அரசு சொல்கிறது: ஊழியர்கள் இந்தப் படத்தைப் பார்த்தமைக்குச் சான்றாக டிக் கெட்டைக் கொண்டுவந்து காட்ட வேண டுமாம். அசாம், கர்நாடக, திரிபுரா மாநில அரசுகள் இந்தப் படத்துக்குச் சிறப்புக் காட்சிகள் ஒழுங்கு செய்கின்றன. பாசக அல்லாத கட்சிகள் ஆளும் மகாராட்டிரத் திலும் சத்தீஸ்கரிலும் மேற்கு வங்கத்திலும் இந்தப் படத்துக்கு வரிச் சலுகை வழங்கும் படி பாசக சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை எழுப்புகின்றனர்.

இந்திய நாட்டின் தலைமையமைச்சர் நரேந்திர மோதி இந்தத் திரைப்படத்தின் இயக்குநரை நேரில் அழைத்துப் பாராட்டு கின்றார். உண்மையை வெளிப்படுத்தும் இந்தப் படத்தைப் பார்த்துப் பயன்பெறும் படி நாட்டு மக்களுக்கெல்லாம் பரிந்துரைப் பதோடு, அதனைக் குற்றாய்வு செய்வோரைக் கடுமையாகச் சாடவும் செய்கிறார். இந்தப் படத்தின் பெயரைக் கெடுக்க சதி நடக்கிறதாம்!

திரையரங்குகளில் இந்தத் திரைப் படத் தைப் பார்த்து முடித்தவுடன் சிலர் பாரத் மாதா கி ஜே! போன்ற முழக்கங்கள் எழுப்பு கின்றனர். இவர்கள் யாராக இருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

ஒரு திரைப்படத்தை இந்துத்துவ ஆற்ற ல்கள் இந்த அளவுக்குத் தலையில் தூக்கிக் கொண்டாடுகின்றன என்றால் அதற்குக் காரணம் இல்லாமற்போகாது. நாம் அந்தக் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் படத்தின் பெயர்: காசுமீர் ஃபைல்ஸ் (THE KASHMIR FILES) எழுதி இயக்கியிருப்பவர்: விவேக் அக்னிஹோத்ரி. இவர் இதற்கு முன்பு இயக்கிய படம்: தாஷ்கண்ட் ஃபைல்ஸ் (THE TASHKENT FILES) அடுத்து இயக்கவிருக்கும் படம்: தில்லி ஃபைல்ஸ் (THE DELHI FILES).

காசுமீர் ஃபைல்ஸ் கதைப்படம்தான் என் றாலும் கதை காசுமீர் வரலாற்றில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றைக் கருவாகக் கொண்டு பின் னப்பட்டுள்ளது. பண்டிட்டுகள் எனப்படும் காசுமீர் பார்ப்பனர்கள் 1980களிலும் 90களி லும் காசுமீரை விட்டு வெளியேறிய நிகழ்வு பண்டிட் வெளி யேற்றம் (PANDIT EXODUS) எனப்படுகிறது. இந்த வரலாற்று நிகழ்வை இது வெளி யேற்றம் அல்ல, இனவழிப்பு (GENO-CIDE)" என்று நிறுவுவதுதான் விவேக் அக்னி ஹோத்ரியின் இந்தப் பட முயற்சி.

இதற்காக அவர் வரலாற்றில் 1990, 2016 ஆகிய இரு காலங்களையும் காசுமீரம், தில்லி ஆகிய இரு களங்களையும் எடுத்துக் கொள் கிறார். 1990ஆம் ஆண்டு காசுமீரில் பண்டிட் டுகள்மீது நிகழ்ந்த தாக்குதல்கள், கொலைகள் உள்ளிட்ட வன்முறையும் இதையடுத்து அவர்கள் அந்த மண்ணை விட்டுக் கூட்டமாக வெளியேறியதும் துயர நிகழ்வுகள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த நிகழ்வுகளின்

வரலாற்றுப் பகைப் புலத்தை இந்தப் படம் திரித்துச் சொல்கிறது.

காசுமீரத்தை இந்தியா தன்னோடு இணைத்துக் கொண்டது எப்படி? இது குறித்துப் பண்டித நேரு காசுமீர மக்களுக் கும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும் அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றாமல் வஞ்சித்தது எப்படி? காசுமீர மக்களின் அன்புத் தலைவர் சேக் அப்துல்லாவின் ஆட்சியைக் கவிழ்த்து அவரை 11 ஆண்டுக் காலம் சிறையில் அடைத்தது எப்படி? காசுமீரத் தேசத்தின் தன்-தீர்வு ரிமையும் குடியாட்சிய உரிமைகளும் நேரு காலத்தில் மட்டுமல்ல, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களின் காலத்திலும் மறுக்கப்பட்டதும் நசுக்கப்பட்டதும் எப்படி? காசுமீரத்தில் நடத்தப்பட்ட தேர்தல்களில் மோசடி செய் யப்பட்டது எப்படி? 1947 முதல் காசுமீர மக்கள் இந் திய வன் பறிப்பை எதிர்த்துப் போராடி வந்த போதிலும் 1987 வரையி லும் குறிப்பிடத்தக்க அளவில் ஆய்தப் போராட்டம் ஏதும் இல்லாமற் போனதும், அந்த ஆண்டு காசுமீரச் சட்டமன்றத் தேர்தலில் இந்தியத் தலைமையமைச்சர் இராசிவ் காந்தியின் ஆட்சிப் பொறுப்பில் பாரிய அள விலும் அப்பட்டமாகவும் நடந்த மோசடி களுக்குப் பிறகே இளைஞர்கள் ஆய்தமெ டுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதும் எப்படி? மறுக்கவே முடியாத இந்த வரலாற்று உண்மை களை அறவே மறைத்து விடுகிறது காசுமீர் ஃபைல்ஸ். இந்த உண் மைகளை காசு மீரம் பற்றிய புறஞ்சார் வர லாற்று ஆசிரியர் எவ ரும் மறுக்க மாட்டார். காசுமீரம் யாருக்கு? என்ற நூலில் நான் இந்த உண்மைகளைச் சுருக்க மாக எடுத்துக் காட்டியுள்ளேன்.

**காசுமீரச் சிக்கல் தேசிய இனச் சிக்கல் என்பதை வேண்டுமென்றே மறைத்து, மதச் சிக்கலாகத் திரித்துக்காட்ட விவேக் அக்னி ஹோத்ரி தலைகீழாக நிற்கிறார்.** அவருக்கு எல்லாமே தலைகீழாகத் தெரிகின்றன.

காசுமீரப் போராட்டத்தின் குறிக்கோள் விடுதலையே. ஆசாதி! என்பதே உயிர் முழக்கம். காசுமீரத்தின் விடுதலைப் போராட் டம் இந்திய வல்லரசியத்துக்கு அச்சுறுத்தல் என்று காட்டினால் அதில் பிழையில்லை. ஆனால் இந்து மதத்துக்கும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களால் அச்சுறுத் தல் என்று நம்பச்




செய்யும் முயற்சியில் காசுமீர் ஃபைல்ஸ் (காசுமீர் கோப்புகள்) காசுமீர் லைஸ் (காசுமீர் பொய்கள்) ஆகி விடுகிறது. முசுலீம்கள் இந்துக்களை அச்சுறுத்தி மதமாற்றம் செய்வ தற்காகவே பண்டிட் இனக் கொலையைச் செய்வதாக இந்தப் படம் கதை கட்டுகிறது, இசுலாமியர் மீதான வெறுப்பை வளர்க்க அவர் கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகவும் பாகிஸ்தானின் கைக்கூலிகளாகவும் காட்டு கிறது. காசுமீரத்து முசுலிம்களில் இந்தியா வுடன் ஒருமைப்படுவதை விரும்பக் கூடிய சிலர் இருப்பது போலவே பாகிஸ்தானுடன் இணைவதை விரும்பக் கூடிய சிலரும் இருப்பது மெய்தான். ஆனால் பெரும் பாலார் விரும்புவது விடுதலையைத்தான்! இந்தி யாவும் வேண்டாம்! பாகிஸ்தானும் வேண் டாம்! விடுதலைதான் வேண்டும்! இதுதான் அவர்களின் வேணவா, பெரு விருப்பம்! ஆசாதி என்ற உயிர்முழக்கத்தின் பொருள் இதுவே! காசுமீரிகளில் பெரும் பாலார் முசுலிம்களாக இருப்பினும் அன்று முதல் இன்று வரை அவர்கள் சமயச் சார்பின்மை யின் பக்கம் உறுதியாக நிற்பவர்கள்.

இந்து முஸ்லிம் கலவரங்களின் வர லாற்றை எடுத்துப் பார்த்தால் எவ்வளவு மோசமான மதவெறி வன்முறைக்கு நடுவிலும் இசு லாமியர்க்கு உதவிய இந்துக்களையும் இந்துக் களுக்கு உதவிய இசுலாமி யர்களையும் காண முடியும். ஆனால் இந்தப் படத்தின் இயக்கு நருக்கு ஒரே ஒரு நல்ல முசுலிம் கூட கிடைக்க வில்லை. உண்மைக் கதை என்ற தோற்றம் உண்டாக் குவதற்காகக் கூட முசுலிம்களில் ஓரிரு வரை மனிதநேயம் உள்ளவர்களாக் காட்ட வேண்டும் என்ற கவலை விவேக் அக்னி ஹோத்ரிக்கு இல்லை. குழந்தை யானாலும் முதியவரானாலும் முசுலிம்

என்றால் மத வெறியன்தான்! இந்துக்களுக்கு எதிரான வன்முறையாளன்தான்! இதை நம்ப மறுத்தால் நீங்கள் தேச விரோதிதான்!

படத்தின் முதல் காட்சியிலேயே கிரிக்கெட் விளையாடும் சிறுவன் சிவா தன்னை சச்சின் டெண்டுல்கராகக் கற்பித்துக் கொள்கிறான். அவனைத் தாக்கும் முசுலிம் இளைஞன் இம்ரான்கானாகக் காட்டப்படுகிறான். பிறகு ஒரு காட்சியில் கணவனை இழந்த சாரதா என்ற இந்துப் பெண் தன் சிறு மகனோடு அகதி முகாமில் இருக்கிறார். அவளுக்கு உதவுவதாகச் சொல்லும் இசுலாமிய முதியவர் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்கிறார்.

படம் முழுக்க முசுலிம்கள் பயங்கரவாதிகளாகவும் பாகிஸ்தான் ஆதரவாளர்களாக வும் மதவெறியர்களாகவும் மட்டுமல்ல, கொடிய காமுகர்களாகவும் சித்திரிக்கப்படு கின்றார்கள். நல்லவராக, ஒழுக்கமுள்ளவராக, மனிதாபிமானம் உள்ளவராக ஒரே ஒரு முஸ்லிம் கூட காட்டப்படவில்லை. மோதி முதல் அண்ணாமலை வரை அனைவரும் இந்தப்படத்தை போற்றிப் புகழ்வதன் அடிப்படை இதுதான்!

இசுலாம் குறித்தும் முசுலிம்கள் குறித் தும் ஆர்எஸ்எஸ் பார்வையும் இதுவேதான்! இந்தப் படத்தின் நாயகன் கிருஷ்ணாபண்டிட் வெளியேற்றக் காலத்தில் சிறுவனாக இருந்தவன். 2016ஆம் ஆண்டு அவன் தில்லியின் ஏஎன்யு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறான். இது ஜெஎன்யு (ஜவகர்லால் நேரு யுனிவர்சிட்டி) பல்கலைக் கழகத்துக்கான குறியீடுதான்! இந்தப் பல்கலைக் கழகத்தின் குடியாட்சியச் சூழல் குறித்தும் அங்கு இடதுசாரிக் கருத்தியல் போக்குகளுக்குள்ள செல்வாக்கு குறித்தும் இந்துத்துவ ஆற்றல்களுக்குள்ள எரிச்சல் முழுவதும் இப் படத்தில் வெளிப்படையாகத் தெரிகிறது. முசுலிம்களும் கிறித்துவர்களும் பொது மையரும் (கம்யூனிஸ்டுகள்) இந்து தேசத்தின் பகைவர்கள் என்று கோல்வால்கர் அறிவித்தார். ஜெஎன்யு-இல் ஓர் இடதுசாரிப் பேராசிரியர் கிருஷ்ணாவை காசுமீர விடுதலைக்கு ஆதரவாக மூளைச் சலவை செய்கிறார். பிறகு காசுமீருக்கே சென்று, பண்டிட் வெளியேற்றக் காலத்துப் பெரிசு களையெல்லாம் சந்தித்துப் பேசி, காசுமீர் செய்திக் கோப்புகளையும் பார்த்த பின் கிருஷ்ணாவிடம் மனமாற்றம் ஏற்படுகிறது. காசுமீரத்தில் அவர் சந்தித்துப் பேசுகிற பயங்கரவாதிகளில் ஒருவரே அவர் தந்தையைக் கொன்றவர் என்றும் தெரிந்து கொள்கிறார். தில்லிக்குத் திரும்பிப் பல் கலைக்கழக மாணவர்களிடையே காசுமீரத்தின் புனித வரலாறு பற்றிச் சொற் பொழிவாற்றுகிறார். ஆர்எஸ்எஸ்-க்கே உரித்தான வரலாற்றுப் புனைவுகளுக்கும் திரிபுகளுக்கும் அந்த உரையே சான்று.

இதை எழுதுகிற நான் தில்லியிலுள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இரு முறை இரவுநேரக் கூட்டங்களில் பேசியுள்ளேன். இரண்டாவது முறை தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கீலானியுடன் சென்றிருந்தேன். அவர் வருவதற்கு வித்யார்த்தி பரிசத் மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் இடதுசாரி மாணவர்களின் ஆதரவோடு அந்தக் கூட்டம் நடை பெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் காசுமீர விடுதலைப் போராட்டம் குறித்துப் பேசினேன். பெரும்பாலான இடதுசாரி மாணவர்கள் காசுமீரம் குறித்து இந்தியத் தேசியப் பார்வையுடன் இருக்கக் கண்டேன். காசுமீரத்தை இந்தியாவின் பிரிக்கவியலாப் பகுதியாகக் கருதும் நாடாளுமன்ற இடதுசாரித் தலைமைகளின் பார்வை தான் அவர்களிடம் எதிரொலித்தது.

பிற்காலத்தில் அஃப்சல் குரு நினைவாக ஜெஎன்யு வளாகத் தில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர் சங்கத் தலைவர் கண்ணையா குமார் நாங்கள் இந்தியாவுக்குள் சுதந்திரம் கேட்கிறோமே தவிர, இந்தியாவிடமிருந்து சுதந்திரம் கேட்கவில்லை என்று பேசிய பேச்சு பரவலாக விவாதிக் கப்பட்டது. இந்தியாவிடமிருந்து சுதந்திரம் கோரும் உரிமை இல்லா விட்டால் இந்தி யாவுக்குள் சுதந்திரம் என்பதற்குப் பொரு ளுண்டா? என்று உமர் காலித், அனிர்பென் பட்டாச்சார்யா ஆகிய மற்ற மாணவர் தலைவர்கள் தொடுத்த வினாவிற்கு விடையில்லை.

பொதுவாக ஜெஎன்யு இடதுசாரிகளின் இந்தக் காசுமீர எதிர்ப்புப் பார்வை விவேக் அக்னிஹோத்ரிக்குத் தெரியாமலிருக்காது. ஆனால் இந்து தேசத்துக்கு எதிரான முசுலிம் சூழ்ச்சியில் இடதுசாரிகளும் உடந்தை என்ற கதையாடலுக்குப் பொருத் தமாக ஜேஎன்யு

(அல்லது ஏஎன்யு) பற்றிய சித்திரம் தீட்டப் படுகிறது. முசுலிம்களும் கம்யூனிஸ்டுகளும் (கிறித்துவர்களும்) அழிக்கப்பட வேண்டிய பகைவர்கள் என்ற சித்திரிப்பு இந்துத்துவ வெறியூட்டலுக்குத் தேவைப்படுகிறது. ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் காசுமீரம் பற்றிய பார்வை வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கக் கூடியதாக மாறு கிறதாம்! படத்தில் வரும் இடதுசாரிப் பேராசிரியை துடிக்கிறார்! உண்மையில் அப்படியிருந்தால் மகிழ்ச்சி!

பண்டிட் வெளியேற்றத்தை இனக் கொலை என்று வகைப்படுத்துவது காசுமீர விடுதலைக்கு எதிரான அவதூறு மட்டு மல்ல! இந்த இனக்கொலையில் எத்தனைப் பேர் கொல்லப்பட்டனர்? இந்தக் கேள் வியையே கேட்கக் கூடாது என்கிறார் விவேக் அக்னி ஹோத்ரி! காசுமீர் ஃபைபல்ஸ் படம் வருவதற்கு நெடுங்காலமுன்பே தகவல் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட விடை: 1990 வெளியேற்றத்தின் போது கொல்லப்பட்ட வர்கள் 30-32 பேர்! வேறொரு முறை 80 பேர் என்ற விடை தரப்பட்டது. ஆக 100 பேருக்கு மேல் இல்லை. இதுதான் இனக்கொலையா? மாநிலங்களவையில் உள்துறை அமைச் சகம் தந்த தகவலின் படி 1988-91 நான் காண்டு காலத்தில் 217 இந்துக்கள் கொல்லப்பட் டார்கள். கொல்லப்பட்டவர்களிலும் வெளி யேறியவர்களிலும் முசுலிம்களும் உண்டு. ஒருசிலரே கொல்லப்பட்டாலும் ஒருசிலரே வெளியேற நேர்ந்தாலும் அது துயரம்தான்! ஆனால் இனக்கொலை என்று வகைப் படுத்துவதற்குரிய தரவுகள் எங்கே?

வெளியேறிய பண்டிட்டுகளின் தொகை ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் என்று பலவாறாகச் சொல்லப்படுகிறது. ஒருசில பண்டிட்டுகளைப் போராளிகள் கொன்றது அவர்கள் பண்டிட்டுகள் எனபதாலோ இந் துக்கள் என்பதாலோ அல்ல, அவர்கள் காசுமீரிகள் மீது அரச பயங்கரவாதத்தை ஏவிய ஆட்சியில் உயரதிகாரிகளாக இருந் தார்கள் என்பதால்தான். இதைச் சாக்கிட்டு பண்டிட்டு களையெல்லாம் வெளியேறத் தூண்டியவர் ஆளுநர் ஜக்மோகன். முதலில் காங்கிரசிலும் பிறகு பாசகவிலும் இருந்த இந்துத்துவ வெறியர். வி.பி. சிங் நாட்டின் தலைமை யமைச்சரான போது அவரை ஆதரிக்க பாசக விதித்த நிபந்தனைகளில் ஒன்று: ஜக் மோகனை ஜம்மு காசுமீர் ஆளுநராக்க வேண் டும் என்பது. ஆளுநரின் அடாவடித்தனத்தால் ஒரு கட்டத்தில் முதல்வர் பரூக் அப்துல்லாவே பதவி விலகி விட்டார். அவர் விலகிய பிறகே ஜக்மோகன் தூண்டுதலால் பண்டிட் வெளி யேற்றம் பெருமளவில் நிகழ்ந்தது. ஜக் மோகனின் குற்றத்தை மறைத்து அப் போதைய உள் துறை அமைச்சர் முப்தி முகமது மீதும் பரூக் அப்துல்லா மீதும் முழுப் பழி சுமத்துகிறது காசுமீர் ஃபைபல்ஸ். ஒரு முழுமையான விசா ரணை நடத்துங்கள், நான் குற்றவாளி யென்றால் என்னைத் தூக்கி லிடுங்கள் என்று இப்போது பரூக் அப்துல்லா அறை கூவல் விடுத்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 370தான் பண்டிட் இனக்கொலைக்குக் காரணம் என்றும் அதை நீக்கி விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்றும் பாதிப் புற்றவர்களின் குரலாகப் பேசுகிறது காசுமீர் ஃபைபல்ஸ். இது நரேந்திர மோதி, அமித் சாவுக்கான மலிவுப் பரப்புரையே தவிர வேறல்ல. இந்திய நாடாளுமன்றத்தில் 370 நிறுத்தி வைக்கப்பட்டு இத்தனை ஆண்டு களுக்குப் பிறகும் ஒரே ஒரு பண்டிட் குடும்பம் கூட காசுமீரத்தில் மீள்குடிய மர்த்தம் செய்யப் படவில்லை என்பதே உண்மை! இத்தனைக் கும் காசுமீரத்து மக்கள் பண்டிட்டுகளை வரவேற்க அணிய மாய் உள்ளார்கள்!

காசுமீர் ஃபைபல்ஸ் படம் காசுமீர விடு தலைக்கு எதிரானது மட்டுமன்று. காசு மீரத்தைக் காட்டி, பாகிஸ்தானைச் சொல்லி, முசுலிம்கள் மீது வெறுப்பைப் பரப்பி இந்து மத வெறியூட்டி நாட்டையே இந்து நாடாக்கும் ஆர்எஸ்எஸ் திட்டத்தில் ஒரு முகமைக் கருவியாக இந்தப் படத்தை இந்துத்துவ ஆற்றல்கள் பயன்படுத்த விரும்புகின்றன. இசுலாமியர்களை இனக் கொலை செய்ய வேண்டும் என்ற வெறிக் கூச்சல் இந்து சாதுக்களிடமிருந்தே எழுகிறது! இந்த இனக் கொலை உள்ளக் கிடக்கையை மறைக்கவே பண்டிட் இனக் கொலை என்ற பொய்யைத் திரைவிரிக் கிறது காசுமீர் ஃபைபல்ஸ்!

இந்தப் படம் தமிழாக்கம் செய்யப்பட்டுத் தமிழ்நாட்டிலும் வெளியிடப்படுகிறது! தமிழர்களே, எச்சரிக்கை!

# தமிழ்த் தேசிய சட்டவியல்

❑ வழக்கறிஞர்

**இரா.வைத்தீஸ்வரன்**

**த**மிழ்த் தேசிய சட்டவியல் என்றவுடன் இதில் எந்தந்த சட்டங்கள் அடங்கும், இப்படி ஒன்று இருக்கிறதா என்ற கேள்விகள் எழுவது இயல்பு. தமிழ் பேசும் மக்களுக்கான நவீன கால தனித்த சட்டம் உண்டா எனில் இலங்கையில் நடைமுறையில் உள்ள தேச வழமைச் சட்டத்தை கூறலாம். மற்றப்படி தமிழ்த் தேசிய மக்களுக்கான தனித்த சட்டங்கள் உண்டா எனில் அப்படி இல்லை என்று கூறிவிட முடியும். அப்படியெனில் தமிழ்த் தேசிய சட்டவியல் என்ற தலைப்பில் எதைப் பற்றி பேச முடியும். தமிழ்த் தேசிய சட்டவியல் பாட்டாளி வர்க்க நலன் சார்ந்த சட்டவியலா? அல்லது முதலாளித்துவ நலன் சார்ந்த சட்டவியலா? இந்த கேள்விகள் நம்முன் எழுவது இயல்பு. திராவிட இயக்கத்தை சேர்ந்தவர்கள் முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரை காலத்தில் கொண்டு வரப்பட்ட சுயமரியாதை திருமணச் சட்டம் பற்றி மிகவும் சிலாகித்து கூட்ட மேடைகளில் பேசுவார்கள். அந்த சட்டம் மிகவும் புரட்சிகரமானது என்றும், அது தமிழ் மக்கள் சார்ந்து இயற்றப்பட்டது என்றும் கூறுவார்கள்.



ஆனால், உண்மையில் கடந்த 1967ம் ஆண்டில் இந்து திருமண (சென்னை திருத்தம்) சட்டம் 1967 நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது. மேற்படி திருத்த சட்டமானது இந்தியா முழுவதுக் குமான இந்து திருமண சட்டம் 1955ன் பிரிவு 7ல் ஒரு திருத்தமாக மேற்கொள்ளப்பட்டதே தவிர மற்றப்படி அது தமிழர்களுக்கான ஒரு சட்டம் அல்ல. தமிழ்த் தேசிய சட்டவியல் என்பதற்கான சிந்தனையை நாம் எங்கு இருந்து தொடங்குவது, எப்படி தொடங்குவது?

தேசம் என்பது ஒரு முதலாளித்துவ கால கட்ட சொல்லாகும். தேசம் என்பதை ஸ்டாலின் ஒரு மொழியை பேசுபவர்கள், அவர்கள் நிலைத்து வாழும் நிலப்பரப்பு, அந்த மக்களிடையே நிலவும் பொருளியல், அந்த மக்களின் பண்பாடு ஆகியவை சேர்ந்ததே ஆகும் என கூறுவார். இந்த வரையரையில் இடம் பெற்றுள்ள பொருளியல் என்பது முதலாளிய பொருளியலையே குறிக்கும். ஏனெனில் தேசம் என்ற வரையரை முதலாளித்துவ காலக்கட்டத்தில் எழுந்த ஒன்று என்பதால் அப்படி. தமிழ்த் தேசிய சட்ட வியலின் வரலாற்றை நாம் தமிழ் இலக்கியங்களிலிருந்தும், பிற பழங் கால சான்றிதழ்களிலிருந்தும் தொகுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. மறுபுறம் ஆங்கில வந்தேறி ஏகாதிபத்தியம் கி.பி.1600-க்கு பிறகு தமிழகத்தை அடிமைப்படுத்தத் தொடங்கியது. ஆங்கில ஏகாதியபத்ய அடிமை காலத்தில் தான் முதலாளித்துவ காலத்திற்குரிய சட்டவிதிமுறைகளும், ஒழுங்குகளும் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டன. அதன் பின்னர் கி.பி.1947 ஆட்சி மாற்றத்திற்கு பின்னரும் 1949 இந்திய அரசியலமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரும், தமிழகத்தில் இந்திய ஆட்சியாளர்

களின் நவீனகால சட்டங்கள் இருந்து வருகின்றன. இத்தகைய சூழலில் தமிழகத்தில் நிலவுடமை கால சட்டவிதி முறைகளின் மீதான விமர்சனம் மற்றும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் மற்றும் இந்திய அரசு காலகட்ட சட்ட விதிமுறைகள் மீதான விமர்சனம் ஆகியவற்றிலிருந்தே நாம் தமிழ்த் தேசிய சட்டவியலை தொகுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

என்ன கொள்கையை நிறைவேற்றுவதற்காக என்ன வகையான ஆட்சியை என்ன அங்கங்களை கொண்டு அமைப்பது என் பதை விளக்குவதுதான் அரசியலமைப் புச்சட்டம். மக்களவை என்று ஒன்று இருக்க வேண்டும். அந்த மக்களவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் நிரப்பப்பட்டதாக இருக்க வேண்டும். அந்த மக்களவைக்கு சட்டத்தை ஏற்றக்கூடிய அதிகாரமும், செயல்படுத்த வேண்டிய அதி காரமும் உடையதாக இருக்க வேண்டும். அந்த மக்களவை தான் அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும். அவ்வாறு தான் உருவாக்கிய அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு அந்த மக்களவை இயங்கும். இப்படிதான் நாடாளுமன்றம் இயங்க வேண்டும். இப்படிதான் நீதிமன்றங்கள் இயங்கவேண்டும் என வரையறுத்து வழி வகுப்பது தான் அரசியலமைப்பு சட்டம். இதுவரையில் தமிழ்த் தேச அரசியலமைப்பு சட்டம் என்று வரலாற்றில் எதுவும் இருந்ததில்லை. தமிழ்த் தேசிய சட்டவியலில் தேடும் நோக்கத்தில் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் மீதான விமர்சனங்களையும், ஆங்கில வல்லரசின் சட்ட விதிகள் மீதான விமர்சனங்களையும் காண்போம்.

இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் முகப்புரையில் 42-வது திருத்தத்தின் படி செய்யப்பட்ட திருத்தத்திற்கு பின்னர் இந்திய அரசிற்கு இவ்வாறு பெயர் சூட்டப்பட் டுள்ளது. அதாவது இறையாண்மை கொண்ட சோசலிச மதசார்பற்ற மக்களாட்சிக் குடியரசு என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 395 சட்டக்கூறுகளில் எந்த ஒரு இடத்திலும் சோசலிசம், மதசார் பின்மை, மக்களாட்சி, குடியரசு ஆகியவற்றுக்கான பொருள் விளக்கம் தெளிவுப்பட தரப்படவில்லை. உண்மையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ ஊழ் தொடங்கிய காலத்தில் அரசில் இருந்து மதத்தை பிரிக்க வேண்டும் என்ற இயக்கம் தொடங் கியது.

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

அவர்களின் நினைவுநாள் – 11.6.1995



**மனுநூல்,**
**எரிந்து சாம்ப லாகட்டும்! - நம்**
**இன இழிவு நீங்கட்டும்! - இங்கு**
**எல்லோரும் சமம் எனும் நிலை**
**இறுதி ஆகட்டும்! - ஆழ்ந்த**
**இருள் போகட்டும் !**

அரசின் தலைவரே மதத்தின் தலை வராக இருந்த நிலையில் அரசியலில் இருந்து மதத்தை பிரித்து மதச்சார்பின்மை ஏற்படுத்த வேண்டும் என கோரினார்கள். இதன் தொடர்ச்சியாகவே மதச்சார்பின்மை என்ற கோட்பாடு உருவானது. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையில் இந்தியாவின் மதச்சார்பற்ற நாடு என எழுதி விட்டு, நடைமுறையில் மதச்சார்பின்மை என்பதற்கு அனைத்து மதங்களையும் சமமாக பாவித்தல் என விளக்கம் கொடுக்கப்படுகிறது. இது போலவே சோசலிசம் என்ற கருத்தானது மக்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற அடிப்படையில் இருந்து உருவானது ஆகும். நாட்டின் செல்வங்களும், உடமைகளும் மக்கள் அனைவருக்கும் சமமாக பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலான செயல்பாடு மற்றும் கருத்துக்களே சோசலிசம் என்பதாகும். ஆனால் இந்திய அரசியலமைப்பு சட்டம் சோசலிசம் என்பதற்கு சரியான வரையறை எதுவும் கூறவில்லை. ஆனால் அதே சமயம் சோசலிசக் கோட்பாட்டின் அடிப்படையில் எந்த திட்டங்களையும் இந்திய அரசு முன் வைப்பதில்லை.

***தொடரும்....***

# “கோட்டபய வீட்டுக்குப் போ” சிறிலங்கா வசந்தம்

❑ செந்தில்

துனிசியா, எகிப்து என மத்திய கிழக்கு நாடுகளில் பற்றிப் படர்ந்த மக்கள் திரள் போராட்டங்கள் 'அரபு வசந்தம்' என்று அழைக்கப்பட்டன. தமிழ்நாட்டில் நடந்த ஜல்லிக்கட்டு உரிமை மீட்புக்கானப் போராட் டமும் அத்துடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டது. இப்போது ஏப்ரல் மாதம் தொடங்கி சிறிலங்கா தலைநகரம் கொழும்பில் உள்ள காலிமுகத் திடலிலும் இன்ன பிற நகர்ப்புற பகுதிகளி லும் நடந்துவரும் போராட்டத்தை 'சிறி லங்கா வசந்தம்' என்று அழைக்கலாம்.

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளியல் நெருக்கடி சிங்கள மக்களைத் தெருவில் இறங்கி போராட வைத்துள்ளது. சிங்கள மக்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இராசபக்சே சகோதரர்களைத் தான் இப்போது ‘பதவி விலகு, வீட்டுக்குப் போ’ என்று மக்கள் போராடி வருகின்றனர். கொரோனாவுக்கு முன்பு இனவழிப்புப் போரின் வெற்றிவாதத்திற்குள்ளாக ஆட்சியைப் பிடித்தவர்கள் இவர்கள். இப்போது ஏற்பட்டுள்ள பொருளியல் நெருக்கடிக்கு இராசபக்சாக்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



கடந்த புதன் அன்று (4-5-2022) சிறிலங்கா நாடாளுமன்றத்தில் பேசிய அதன் நிதியமைச்சர் அலி சாப்ரி விவரங்களைச் சொன்னார். கோத்தபய இராசபக்சே அரசால் கொண்டு வரப்பட்ட வரிவிலக்கு காரணமாக கடந்த 2020 இலும் 2021 இலும் 5 இலட்சம் பேர் வரி செலுத்தாத நிலையேற்பட்டது. சிறிலங்கா அரசு தன் வரவை விடவும் 2.5 மடங்கு அதிகமாக செலவு செய்து வருகிறது. அதாவது கடந்த 2021 ஆம் ஆண்டு 1500 பில்லியன் சிறிலங்கா ரூபாய்கள் அதன் வரவு. மொத்த செலவோ 3522 பில்லியன் ரூபாய்கள். சிறிலங்கா அரசின் மொத்த கடன் தொகை 53 பில்லியன் டாலர்கள். 2026 ஆம் ஆண்டுக்குள் இதில் 25 பில்லியன் டாலர் செலுத்தப்பட வேண்டும். அதன்படி இந்த ஆண்டு 7 பில்லியன் டாலர் கடனை திருப்பி செலுத்த வேண்டும்.

எதிர்க்கட்சிகள் இந்த பொருளியல் நெருக்கடிக்கு காரணமாக இராசபக்சே சகோதரர் களை சொல்கின்றன. 2019 இல் கோத்தபய இராசபக்சே ஆட்சிக்கு வந்தவுடன் வரி விலக்கை அமல்படுத்தினார். இதன் விளைவாக நாட்டின் வருவாய் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9% என்றளவுக்கு சரிந்தது. அதை தொடர்ந்து வந்த கோவிட் பெருந்தொற்று நெருக்கடி உலகெங்கும் பொது முடக்கத்தை கொண்டு வந்தது. சிறிலங்காவின் சுற்றுலாத் துறை, அயற் செலாவணி வருவாய் வெகுவாக அடிவாங்கியது. உடனே, இந்த நெருக் கடியை எதிர்கொள்வதற்காக சிறிலங்கா அரசு பணத்தை வரையறையின்றி அச்சடிக்கத் தொடங்கியது. திசம்பர் 2019 க்கும் ஆகஸ்ட் 2021க்கும் இடைப்பட்ட காலத்தில் 42 நாணயத்தை அதிகமாக அச்சடித்து சுற்றோட்டத்தில் விட்டது. கடந்த ஏப்ரலில், கோத்தபய இராச பக்சே போதிய திட்டமிடலும் மக்கள் பங்கேற்பும் இன்றி

வேளாண் துறையில் செயற்கை உரப் பயன்பாட்டை தடை செய்து, இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தது. உர இறக்கு மதியைக் கட்டுப் படுத்தும் நோக்கத் தில் அரசு இம்முடிவை எடுத்துள்ளது. ஆனால், இது வேளாண் துறையைப் பாதித்தது. ஒட்டுமொத்த வேலை வழங்கலில் 3 இல் 1 பங்கும் உள் நாட்டு உற்பத்தியில் 8 உம் வேளாண் துறையைச் சார்ந்து இருந்த நிலையில் இயற்கை வேளாண்மை' என்ற கொள்கை முடிவு அடுத்த நெருக்கடிக்கு வித்திட்டது. நெல் உற்பத்தியின் வீழ்ச்சி உணவு தேவைக்கு முழுக்க முழுக்க இறக்குமதியை சார்ந்திருப்பதை நோக்கி தள்ளியது. தேயிலை உற்பத்தியின் வீழ்ச்சி தேயிலை ஏற்றுமதி வருவாயைப் பாதித்த தோடு அயற்செலாவணி கையிருப்பைக் குறைத் தது. இதைப் புரிந்து கொண்டு கடந்த நவம்பரில் வேளாண் துறையில் அரசு மேற் கொண்ட கொள்கை மாற்றத்தை பகுதியளவில் கை விட்டது. ஆனால், அதற்குள் நிலைமை கைமீறி விட்டது.

அதேநேரத்தில், சிறிலங்காவின் பொரு ளியல் கொள்கைப் பற்றிய வரலாற்றுப் பார்வை கொண்டோர் இச்சிக்கலுக்கான பொறுப்பை ஊழலில் திளைக்கும் இராசபக்சே சகோதரர் களின் குடும்ப ஆட்சியின் மீது மட்டும் சுமத்த வில்லை. மாறாக, சிறிலங்காவின் பொருளியல் அடிப்படை என்பது வெறுமனே சுற்றுலா, தேயிலை உற்பத்தி மற்றும் ஐவுளித் துறை ஆகிய வற்றை சார்ந்திருக்கிறது. நவீன தொழில் துறை வளர்ச்சியில் சிறிலங்காவின் இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சரி சிறிலங்கா சுதந்திர கட்சியும் சரி அக்கறை கொள்ளவில்லை. இப்பிராந்தியத்தில் உலகமய, தாராளிய, தனியார்மய கொள்கைக்குள் முதலில் அடியெடுத்து வைத்த நாடு (1976 இல் சீனா, இந்தியாவுக்கு முன்பே) சிறிலங்கா என்றாலும் அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய அயல் முதலீடு சார் தொழில் துறை, சேவைதுறை வளர்ச்சிகூட உள்நாட்டுப் போர் காரணமாக ஏற்படவில்லை. 1976 இல் உலகமய, தாராளியக் கொள்கையில் அடியெடுத்து வைத்ததில் இருந்து 16 முறை பொருளியல் நெருக்கடிக்கு உள்ளாகி பின் அதில் இருந்து பன்னாட்டு நாணய நிதியத்தால் மீட்கப்பட்ட நாடாக சிறிலங்கா அறியப்படுகிறது. எனவே, கோத்தபய இராசபக்சேவின் தவறான கொள் கைகள், குடும்ப ஆட்சி, சர்வாதிகாரப் போக்கு, ஊழல் ஆகியவற்றோடு சிறிலங்காவின் பொருளியல் கட்டமைப்பே இத்தகைய நெருக் கடியை எதிர்கொள்வதற்கான ஏரணத்தைக் கொண்டுள்ளது என்று பொருளியல் அறி ஞர்கள் சொல்கின்றனர். குறிப்பாக, இந்த நெருக்கடியில் இருந்து மீண்டு நிரந்தர தீர்வு காண்பதற்கு வேளாண் துறையை நவீனப் படுத்துதல், தொழில் துறையை வளர்த் தெடுத்தல் ஆகிய அடிப்படை மாற்றங்களை செய்ய வேண்டி யுள்ளது. சிறிலங்காவில் ஏற்று மதியைவிட 80 அதிகமாக இறக்குமதி உள்ளது. அடிப்படை தேவைகளுக்கான தற்சார்பை நோக்கிச் செல்வதற்கான பொருளியல் கொள்கையை வகுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றனர். இன்னொரு புறம், இந்த பழமைவாத பொருளியல் கொள்கைக்கு சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் கொள்கைக்கும் இடையிலான உறவு குறித்து அதிகம் விவாதிக் கப்படாமல் இருக்கிறது.

சிறிலங்காவின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவோ அல்லது அவரைத் தொடர்ந்து வந்த பண்டாரநாயக்காவோ அரசியல் கொள்கையாக பேரினவாதத்தை தழுவிக் கொண்டு பொருளியல் தளத்தில் வேளாண் உற்பத்தி சார்ந்த கொள்கையை நடைமுறையாக்கினார்கள். 1970 க்குப் பின்னர் இனவாதம் இராணுவத் தன்மையைப் பெற்று உள்நாட்டுப் போராக உருவெ டுத்தது. சிறிலங்கா அரசு 1980 தொடங்கி 2009 வரையான உள்நாட்டுப் போர் காலத்தில் படைக்காக கணிசமான தொகையை செலவு செய்தது. சிறிலங்கா அரசின் படை வரிவாக்கம், ஆயுத குவிப்பு இவையாவும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புக்காகவே செலவழிக்கப் பட்டது. 2009 க்குப் பின்னும் அது தனது படைச் செலவைக் குறைத்துக் கொள்ளவில்லை. 2009-2017 காலகட்டத்தில் அதன் ஒட்டு மொத்த ஆண்டுச் செலவினத்தில் 11 படைச் செலவுக்கானதாகும். போர்க் காலத்தை விடவும் 1176 மில்லியன் டாலர் செலவு செய்யப்பட்டது. உலகிலேயே தனது படையின் 99 விழுக் காட்டினரை செயல்பாட்டில் வைத்திருக்கும் ஒரே நாடு சிறிலங்காதான். படையினர் ஓய்வூதியமாக மட்டும் ஆண்டொன்றுக்கு 170 மில்லியன் டாலர் செலவு செய்யும் நாடு அது. போருக்குப் பின்பும் படையினரின் சம்பளத்தை 45 உயர்த்தியுள்ளது. இப்படி பெருஞ்செலவில் உருவாக்கித் தீனிப் போட்டு பேணப்படும்

படையினரில் பெரும்பகுதி தமிழர் தாயகமான வடக்கு கிழக்கிலேயே நிலைகொண்டுள்ளனர். இவ்வண்ணம், சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் என்பது சிறிலங்காவின் பொருளியல் நெருக்கடிக்கான முதன்மைக் காரணங்களில் பிரித்துப் பார்க்க முடியாததாகும்.

### தமிழர் நிலைப்பாடு குறித்து

"கோத்தபய வீட்டுக்குப் போ" என்று சிங்களர்கள் எழுப்பும் முழக்கம் தமிழர்களுடை யதும்தான். 2009 ஆம் ஆண்டு நடந்தேறிய முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்குப் பின்னான இந்த 13 ஆண்டுகளில் தமிழ் மக்கள் இராசபக்சே சகோதரர்களுக்கு வாக்களிக்கவில்லை, அவர்கள் பதவியில் இருப்பதை விரும்பவில்லை. சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள்தான் இவர்கள். அதே சிங்கள மக்கள் இன்று அவர்களைப் பதவி விலக சொல்கிறார்கள். தமிழ் மக்களோ அவர்கள் பதவியில் இருந்து விரட்டியடிக்கப்படுவதோடு இனவழிப்புக் குற்றங்களுக்காக பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் கூண்டிலேற்றப்பட்டு சிறைப் படுத்தப்பட வேண்டும் என்று இத்தனை ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

ரசியப் புரட்சியின் போது ஜார் மன்னனை வீழ்த்துவதற்கு "போரை நிறுத்து, ரொட்டி வேண்டும்" என்ற முழக்கத்தை லெனின் வடித்தெடுத்தார். இது ரசியர்களைப் புரட்சிக்கு அறைகூவி அழைப்பதற்குப் போதுமானதாக இருந்தது. ஆனால், ஜார் ரசியாவின் கீழ் இருந்த பல்வேறு தேசங்களையும் புரட்சியில் இணைப்பதற்குப் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையை லெனின் முன்வைத்தார். பெரும்பான்மை ரசிய இனத்தில் இருந்து லெனின் இப்படி ஓர் அறைகூவலை விடுத்து ரசியா அல்லாத தேசங்களைப் ஜார் மன்னனுக்கு எதிரானப் புரட்சிப் போராட்டத்தில் வெற்றிகரமாக இணைத்தார்.

சிங்கள மக்களின் போராட்டத்திலோ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஏற்பளித்து இதுவரை எவரும் தமிழர்களை நோக்கி அறைகூவல் விடுக்கவில்லை. போராட்டம் அதிகம் தன்னெழுச்சித் தன்மை வாய்ந்ததாக இருப்பினும் ஜனதா விமுக்தி பெரமுனா என்ற இடதுசாரி அமைப்பும் அதில் இருந்து பிரிந்து வந்த சோசலிச முன்னணியும் குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்துகின்றன. ஆயினும் இவ்விரு பிரிவினரும் தமிழருக்கு இழைக்கப் பட்டது இனவழிப்பு என்று ஏற்கவில்லை, தமிழர்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமைக்கும் ஏற்பளிக்கவில்லை.

அதேநேரத்தில், சிறுபான்மை தேசிய இனமான தமிழ்த் தரப்பில் இருந்து கோத்தபய பதவி விலகு என்பதோடு 'கோத்தபயவைக் கூண்டில் ஏற்ற வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட வேண்டும். இதன்மூலம் சிங்கள மக்கள் சர்வாதிகாரத்திற்கும், குடும்ப ஆட்சிக்கும், நிர்வாக சீர்கேடுகளுக்கும், ஊழலுக்கும் எதிராக நடத்தி வரும் போராட்டத்தில் தமிழர்கள் தம்மையும் இணைத்துக் கொள்ள



முடியும். குடியாட்சியத்திற்காகப் போராடும் சிங்களப் போராட்டக்காரர்கள் தமிழர்களுக்கு செய்யப் பட்ட கொடுமைகள் குறித்துப் புரிந்து கொள்வதற்கு இது உதவும்.

எனவே, இராசபக்சேக்களைப் பதவியில் இருந்து கீழிறக்கி இனவழிப்புக் குற்றத் திற்காக சிறைக்கனுப்ப வேண்டும், பெரும் பொருட் செலவோடு தமிழர் தாயகப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிங்களப் படையை வெளி யேற்று, பயங்கரவாத தடை சட்டத்தை ரத்து செய் என்று முழங்கியபடி வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் தெருவில் இறங்க வேண்டும். சிங்கள மக்களின் போராட்டத்தால் திறந்து விடப்பட்ட குடியாட்சிய வெளி தமிழ்ப் பரப்பிலும் விரி வடையும். சிங்கள மக்களைப் போராட அனு மதித்துவிட்டு தமிழ் மக்கள் மீது படை யினரை ஏவ முடியாது. அப்படி ஏவினால் உலக நாடுகள் கண்டனக் குரல் எழுப்பும். அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் தமிழர்கள் குடியாட்சி யத்தின் பக்கம் நிற்பதைப் புரிந்துகொள்ள உதவும்.

### போராட்டத்தின் திசைவழி

புரட்சிகர தலைமை இன்றியும் புரட்சிகர தத்துவமின்றியும் தன்னெழுச்சிப் போராட்ட மாகவே இது வெடித்துள்ளது. 20 ஆவது சட்டத்திருத்தத்தை நீக்கி, ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்துள்ள 19 ஆம் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு பௌத்த மகாசங்கத்தின் ஒரு பிரிவினர் முன்வைக்கின்றனர். அப்படியான எந்தவொரு திருத்தமும் தேவையில்லை என்று மகாசங்கத் தின் இன்னொரு பிரிவினர் சொல்கின்றனர். மகிந்த இராசபக்சே பிரதமர் பதவியில் இருந்து வெளியேறிவிட்டார். அவரது ஆதரவாளர்கள் கலவரங்களில் ஈடுபட்டதால் அது மகிந்தாவுக்கு எதிரானப் பெருங்கோபமாக மாறியுள்ளது. பௌத்த மகாசங்கம் போர் வெற்றி நாயகர் களான கோத்தபயாவையும் மகிந்தாவையும் பாதுகாக்க நினைகின்றது. ஆனால், நிலைமை கை மீறி போய்க் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது.

இந்த மக்கள் எழுச்சி குடும்ப ஆட்சி, ஊழல், நிர்வாக சீர்கேடு ஆகியவற்றிற்கு எதிரானப் போராட்டம் என்ற வகையில் ஒரு குடியாட்சிய உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. குடியாட் சியத்திற்கான இந்த போராட்டத்தோடு தமி ழர்கள் கைகோர்ப்பதன் மூலம் தமிழர் தரப்புக்கு




சிங்கள மக்களுடன் உரையாடுவதற்கான வெளி திறந்தவிடப்படும். இது பெரிய பண்பு மாற்றமாக இல்லாவிடிலும் ஓர் சிறிய அளவு மாற்றமாக காட்சி தருகிறது. ஆனால், பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பது போல் பசி போனால் பத்தும் மீண்டும் வந்து விடுமோ என்ற அச்சமும் இருக்கிறது. போராட்டம் ஓர் இரத்தக் களரியில் முடியுமா? அல்லது கோத்தபய பதவி விலகுவதில் முடியுமா? என்பது இன்னும் சில நாட்களில் தெரிய வரும். வலுவான எதிர்க்கட்சி இல்லாத நிலையில் மகாசங்கத் தால் புதிதாக ஒருவரை ஜனாதிபதியாக அடையாளம் காண முடியாதநிலை இருக்கிறது. இதனால், இப் போராட்டம் மேலும் நீட்டிக்கும் பட்சத்தில் அதிகம் வன்முறையை நோக்கிச் செல்லக் கூடும். ஒரு புரட்சிகரமான தத்து வத்தைக் கொண்ட தலைமை இல்லாத நிலையில் இந்த தன்னெழுச்சிப் போராட்டம் புரட்சிகர வளர்ச்சிப் பெறுமா? என்பது இன்னும் சில நாட்களில் தெளிவாக தெரிய வந்துவிடும். ஆயினும், குடியாட்சி யத்திற்காக மக்கள் நடத்திவரும் போராட் டத்தில் இருந்து பெறக்கூடிய படிப் பினைகள் பெறுபேறாக பார்க்கத்தக்கன. அத்தகைய பற்பல மக்கள் திரள் போராட் டங்களின் செயல் வழியில்தான் சிறிலங்காவில் சிங்களர்களுக்கான குடியாட்சியமும் தமிழர் களுக்கான இன விடுதலையும் ஏற்படும்.

சிறிலங்கா வசந்தம் வெல்லட்டும்! தேசிய இனங்களுக்கு இடையே சம உரிமை உருவா கட்டும்!

**சிறுகதை**

# அழைப்பிதழ்

❑ ம.தி.முத்துக்குமார்

**ம**ஞ்சப் பையில் அழைப்பிதழோடு தம்பதி சகிதமாய் கிளம்பி விட்டனர் ஆனந்தின் பெற்றோர் வரதப்பனும் காஞ்சனாவும். முதலில் யாருக்கு அழைப்பிதழை வைப்பது என்ற கேள்விக்கு இருவரின் உள்ளத்திலும் விடையாக இருந்தவர் மருத்துவர் அருணாச் சலம். அதனால் அழைப்பிதழை அச்சகத்தி லிருந்து வாங்கிய கையோடு அவரைப் பார்க்க ஈரோட்டுக்கு பேருந்து ஏறினர்.

மூன்று மாதங்களுக்கு முன்பு இதே போல் இருவரும் மருத்துவரைப் பார்க்கப் போகும் போது இப்போதிருக்கும் தெளிவு அவர்களுக்கு இல்லை. கவலை, குழப்பம், கோபம், அவ மானம், விரக்தி என பல்வேறு உணர்வுகள் வாட்டி வதைக்க, நொந்து போன நிலையில் தான் டாக்டர் அருணாச்சலத்தை பார்த் தார்கள்.

அருணாச்சலம் பிரபல பாலியல் மருத் துவர். ஏற்கெனவே தன் அலுவலக நண்பர் ஒரு வருக்காக இவரை பார்த்தபோது அவர் மீது ஏற்பட்ட நம்பிக்கையே வரதப்பனுக்கு இவரை சந்திக்க தூண்டியது.

"இவன்தான் டாக்டர் என் மகன் ஆனந்த். இவன் பண்றதை நீங்களே பாருங்க." என்று தன் போனில் இருந்த வீடியோவை இயக்கி விட்டு மருத்துவரிடம் கொடுத்தார் வரதப்பன்.

நிலைக்கண்ணாடிக்கு சற்று பக்க வாட்டில் வைக்கப்பட்டிருந்த போனில் கேமரா இயங்கிக் கொண்டிருப்பது தெரியாமல் அறைக்குள்



நுழைந்த ஆனந்தன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு கதவைச் சாத்தினான். கண்ணாடியின் முன் வந்து நின்று தன்னையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தவன், சீப்பை எடுத்துக் கொண்டான். பக்கவாட்டில் வகிடெடுத்து சீவியிருந்தவன் அதைக் கலைத்துவிட்டு நடு வகிடெடுத்து சீவிக் கொண்டான். தான் அணிந்திருந்த கைச் சட்டை, கால் சட்டையைக் கழற்றிவிட்டு, பக்கத்து செல்பில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அம்மாவின் ஜாக்கெட்டை அணிந்து கொண்டான். மார்புப் பகுதி லூசாக இருக்க கைக்குட்டைகளை எடுத்து மடித்து உள்ளே வைத்துக் கொண் டான். பின் புடவையை எடுத்து முதலில் மாராப்பை போட்டுக் கொண்டு உடலில் புடவையைச் சுற்றிக் கொண்டு இரண்டு கைகளாலும் அழகாக மடிப்பெடுத்து கொசுவம் செருகிக் கொண்டான். பிறகு மாராப்பை இழுத்து மூடி அழகு பார்த்துக் கொண்டு, வளையல், தோடு, லிப்ஸ்டிக் என்று தன்னை அழகுபடுத்திக் கொண்டான்.

வீடியோ நீண்டு கொண்டே போக, மருத் துவர் அதை அணைத்துவிட்டு, வரதப் பனையும் காஞ்சனாவையும் ஏறிட்டார். காஞ் சனா விசும்பிக் கொண்டிருந்தார். வரதப்பன் பரிதாபமாக மருத்துவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"உங்க பையன் கிட்ட இது பத்தி பேசு னீங்களா..?"

"இன்னும் இல்ல.. நாலுபேர் இவன பொம்பளசட்டின்னு சொல்லும் போது நாங்க நம்பல.. அப்புறமா இவனை கண் காணிக்கும் போது உண்மையா இருக்கு மோன்னு சந்தேகம்.. அதனால போன் கேமராவை ஆன் பண்ணி வெச்சிட்டு, கோயிலுக்குப் போறோம்.. வர்றதுக்கு ஒரு மணி நேரம் ஆகும்ன்னு சொல்லி கிளம்பிட்டோம்.. வந்து இதைப் பாத்துட்டு கோபம்தான்.. என்ன செய்யற துன்னு தெரியலை.. அதான் உங்ககிட்ட ஆலோ சனை கேட்டுக்கலான்னு.."

காஞ்சனாவின் விசம்பல் கேட்க, அவளை சமாதானப்படுத்திவிட்டு, "டாக்டர்.. என் பையன் அரவாணியா மாறிட்டானா..?"

"அப்படித்தான் தெரியுது.."

"அரவாணியா மாறித்தான் இப்படி அலங் காரம் பண்ணணுமா..? ஏதோ ஆசப்பட்டு மேக்கப்புக்காக..?"

"நீங்க சொல்றமாதிரி சில பேர் குரோமோ சோம்ல மாற்றம் ஏற்படாம ஆசைக்காக மேலோட்டமா இப்படி செய்யலாம்.. ஆனா இவனோட நடவடிக்கையைப் பார்த்தா அப்படி தெரியலை.."

நப்பாசை நிராசையாகப் போய்விட்ட வருத்தம் வரதப்பனின் முகத்தில். "என்ன செய்யலான்னு இருக்கீங்க..?"

"தெரியல டாக்டர்.."

"நாளைக்கு அவனை கூட்டிட்டு வாங்க நான் பேசிப் பாக்குறேன்.. டெஸ்ட் பண்ணி யும் உறுதி படுத்திக்கலாம்.."

மறுநாள் ஆனந்தனை கூட்டி வந்தார்கள். டாக்டர் ஆனந்தனிடம் தனியாக பேசிப் பார்த்து விட்டு உறுதிப்படுத்தி விட்டார், ஆனந்தன் அரவாணியாக மாறி விட்டான் என்று.

கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் பொய்த்துப் போய் விட்டதாய் உணர்ந்தார்கள் இருவரும். ஆசை ஆசையாய் ஆண் மகனைப் பெற் றெடுத்து பதினைந்து வருடங்கள் வளர்த்த பிறகு அவன் ஆண் இல்லை. பெண் என்று சொன்னால் எப்படி இருக்கும்..? அடுத்து என்ன செய்வது என்ற கேள்வி இவர்கள் முன் மலைபோல் நின்றது.

"நீங்க மத்தவங்க கிட்ட இருந்து மாறு பட்டிருக்கீங்க..? கேள்விப்பட்ட உடனே பையனை அடிச்சி வெரட்டாம, என்ன செய்ய லாம்ன்னு கேக்கறீங்க பாருங்க.. அதுவே ஒரு நல்ல அணுகுமுறை.. நான் ஒன்னு சொன்னா கேப்பீங்களா..?"

விரக்தியாய் டாக்டரை நோக்கினர் வரதப் பனும், காஞ்சனாவும்.

"நீங்க பையனைத்தான் பெத்தீங்க.. வளர்த் தீங்க.. ஆனா அதை மறந்திடுங்க.. ஒரு பெண் ணைத்தான் பெத்தோம்ன்னு நெனைச்சி.. ஒரு மகளா இவன பாருங்க.."

"சொந்தக்காரங்க எல்லாம் என்ன பேசு வாங்க..? இனிமே நாங்க என்ன பண்ணு வோம்.. ஐயோ.. "காஞ்சனா வாய்விட்டு அழுதாள்". "சொந்த பந்த மெல்லாம் தேவை தான்.. அவங்கள விட பெரிய சொந்தம் உங்க மகன்.. அவனோட இடத்துல இருந்து யோசிங்க.. அவனை வெறுக்காதீங்க.. இனி மேல்தான் அவனுக்கு உங்க ஆதரவு தேவைப் படுது.."

"நீங்க சொல்றமாதிரி பாக்குற பக்குவம் எங்களுக்கு இருக்கான்னு தெரியலை டாக்டர்.. நாலு பேர் மூஞ்சியில எப்படி முழிப்போம்.."

என்று செல்லிவிட்டு வரதப்பன் வேக மாக எழுந்து நெடுநெடுவென வெளியே சென்றார். அவர் பின்னாலேயே காஞ்சனாவும் எழுந்து சென்றார். வெளியே உட்கார்ந்திருந்த ஆனந்தன், "அப்பா.. அம்மா.." என்று கூப்பிட தெளிவாகக் கேட்டும் திரும்ப மனமில்லாமல் வரதப்பன் சென்றார். மகனை ஒரு முறை திரும்பப் பார்த்து விட்டு, அவனை அழைப்பதா வேண்டாமா என்று முடிவெடுக்க முடியாத நிலையில் தன் கணவர் பின்னால் வேகமாகச் சென்றார் காஞ்சனா. அவர்கள் பின்னாலேயே ஆனந்தனும் சென்றான். அவனை ஏறிட்டும் பார்க்காமல் அவர்கள் பேருந்தில் ஏறி உட் கார்ந்து கொண்டனர். ஆனந்தனும் ஏறி அவர்கள் பின்னால் உட்கார்ந்து கொண்டான்.

நடத்துனர் வந்து பயணச்சீட்டை கேட்க, "அந்தியூர் ரெண்டு டிக்கெட்.." என்று கேட்ட வரதப்பனின் குரல் உடைந்து வந்தது. ஏங்க மூனு டிக்கெட் எடுங்க என்று சொல்லத் தோன் றினாலும் முடியாமல் முந்தானையை வாயில் பொத்திக் கொண்டு தலையை ஜன்னலோரம் திருப்பிக் கொண்டார் காஞ்சனா.. ஆனந்தின் இதயம் உடைந்து இருக்க வேண்டும்.. அப்பா எனக்கும் ஒரு டிக்கெட் எடுப்பா.. என்று கெஞ்சியது ஆனந்தனின் குரல். அதில் இருந்த பரிதாபம் அவளை இம்சித்தது. தன் கணவனை திரும்பிப் பார்த்தார். பிணத் துக்கு இணையாக செத்துப் போயிருந்தது வரதப் பனின் முகம். அவரிடமும் பேசத் தோன்றாமல், தன் மகனையும் ஏறிட்டுப் பார்க்க விரும்பாமல் தானும் ஒரு பிணமாய் ஜன்னல் கம்பியில் ஒட்டிக்கொண்டார்.

ஆனந்தன் தனக்காக ஒரு சீட்டு கேட்டு வாங்குவது காதில் விழவே காஞ்சனாவுக்கு ஆறுதல். தன் மகன் ஓடிப்போகும் எண்ணத் தில் இல்லை என்று.

பேருந்து அந்தியூரில் நின்றது. அது கடைசி நிறுத்தம் என்பதால் அனைவரும் இறங்கினர். வரதப்பன் இறங்கி வேகமாக நடந்தார். காஞ்சனா எதுவும் தோன்றாமல் அவருடன் சேர்ந்து நடந்தார். பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனந்தன் பின்னால் வருவான் என்று நினைத்தார். ஆனால் அவன்

வரவில்லை என்பதை அவள் உள்மனம் சொன்னது. ஒரு வேளை அப்படியே சென்று விடுவானோ.. தாயின் மனம் அடித்துக் கொண்டது. சிறிது தூரம் நடந்து போக பத்ரகாளியம்மன் கோயில் கோபுரம் தெரிய அதைச் சாக்கிட்டு நின்று கொண்டாள். அம்மனை நினைத்து வேண் டிக் கொண்டாள். என் மகனை திரும்பக் கொடுத்துவிடு என்று வேண்டிக் கொண்டு அப்படியே திரும்பிப் பார்த்தார். அதுவரை பேருந்தில் இருந்து இறங் காமல் படியிலேயே நின்று கொண்டிருந்த ஆனந்தன், திரும்பிப் பார்த்த அம்மாவின் பார்வையால் டக்கென்று இறங்கிக் கொண டான். வீட்டுக்குள் வரதப்பன் நெடுநெடு வென்று சென்றுவிட காஞ்சனா திரும்பிப் பார்த்தாள். தூரத்தில் ஆனந்தன் வருவதை அறிந்து கதவை அடித்து சாத்தினாள்.

உற்றார் உறவினரின் ஏச்சுப் பேச்சுக்கு பயந்து கதவை அடித்துச் சாத்தினாலும் தாய்ப் பாசம் அவரை தாழ் போட விட வில்லை. அப்படியே சுவரோடு சுவராக சாய்ந்தார். அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்துக் கிளம்பியது.

ஆனந்தன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். அழுது கொண்டிருந்த அம்மாவின் அருகில் வந்து அமர்ந்து, அம்மா நான் ஒண்ணும் தப்பு பண்ண லம்மா.. என்ன வெறுக்காதீங்கம்மா.. என்று தொடப்போன வனின் கையை தட்டிவிட்டு எழுத்து போய் அறைக்குள் சென்று படுக்கையில் விழுந்து அழுதார்.

அம்மா.. நான் இனிமே அப்படி பண்ண மாட்டம்மா.. சத்தியம்மா.. என்ன நம்பும்மா.. என்ன வெறுத்து ஒதுக்காதீங்கம்மா.. ஆனந் தன் அழுதான். அவன் சொன்ன வார்த்தை காஞ்சனாவுக்கு தெம்பைக் கொடுத்தது.

இனிமே அப்படி செய்ய மாட்ட தானே.. என் கண்ணுல்ல.. எனக்குத் தெரியும்.. நீ எம் பையன்தான்.. என்று கட்டிக் கொண் டாள்.

வரதப்பனுக்கோ அவன் சொன்னது உள்ளூர மகிழ்ச்சியை உண்டு பண்ணினா லும் இது உதட்டளவில் வந்த வார்த்தையாக இல்லாமல் உள்ளத்தில் இருந்து வந்த வார்த் தையாக நடைமுறைக்கு வந்தால் நல்லது என நினைத்துக் கொண்டார்.

ஒரு மாதம் இயல்பாக கழிந்தது. ஆனந்த் இயல்பாக இருக்க நினைத்தான். இயல்பாக இருப்பது போல் காட்டிக் கொண்டான். அவன் நடித்துக் கொண்டு இருக்கிறான் என்பதை வரதப்பனும், காஞ்சனாவும் அறிந்தே இருந் தனர். ஆனந்தன் இரவு நேரத்தில் தலைய ணையை முகத்தில் புதைத்துக் கொண்டு அவன் அழுவதும், யாருமில்லாத நேரத்தில் கழிவறைக்குச் சென்று மணிக்கணக்கில் அமர்ந்து கொள்வதும், அவன் அங்க அசையில் இன்னும் கூடுதலாக பெண்மை அதிகரித்து வருவ தையும் அவர்கள் கண்டு கொண்டுதான் இருந்தார்கள். இருந்தாலும் அவர்களால் நேரடியாக அவனை கண்டிக்க முடிய வில்லை. ஒரு நாள் தூரத்து உறவினர் ஒருவர் வந்தார். அவருடன், ஆனந்தன் வயதை ஒத்த மகனும் இருந்தான். அவன் ஆனந்தனை விளையாட கூப்பிட அவனுடன் ஆனந்தனால் சகஜமாக விளையாட முடியவில்லை.

அதை அவன் புகாராகவே தன் தந்தை யிடம் சொல்லிவிட்டான். "அப்பா அவன் பொம்பள புள்ள மாதிரி ரொம்ப கூச்சப்படு றாம்ப்பா.."

அவரும் ஆனந்தனின் நடவடிக்கையை கவனித்து விட்டு, போகும் போது, அறிவுரை என்ற பெயரில் ஆனந்தனையும் அவன் பெற்றோரையும் நோகடித்துவிட்டு சென்றார்.

"பாவம் ஒரே பையன் இப்படி இருக்கான்.. நல்ல டாக்டர்கிட்ட காட்டுங்க.. இல்லேன்னா.. அடிச்சி வீட்ட விட்டு தொறத்துங்க.. வச்சி ருந்தா உங்களுக்குத்தான் அவமானம்.."

அவர் போன பிறகு வதரப்பனும் காஞ் சனாவும் வெளியில் தலை காட்ட முடியாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். அவசியம் கலந்து கொள்ள வேண்டிய திருமண நிகழ்வுக்குக்கூட போகாமல் இருந்து விட்டனர்.

ஆனந்தன் நிலையும் அதுதான். இரு தலைக்கொள்ளி எறும்பாக தவித்தான். இந்த வேதனையிலிருந்து ஒரு விடிவு வேண்டும் என்று முடிவெடுத்து ஒரு நாள் அப்பா இல்லாத நேரம் பார்த்து அம்மாவின் முன் நின்று அழுது கொண்டே சொன்னான்.

"அம்மா.. என்னால நடிக்க முடியலம்மா.. நான் ஆம்பள இல்லம்மா.. பொண்ணு.. ஒண்ணுக்கு போகும் போதெல்லாம் அத பாக்கும் போது கொமட்டலாவே இருக் கும்மா.. மலத்த சுமக்குற மாதிரியே இருக்கு.. நான் போயிட்றேம்மா.. என்னால உங்களுக்கும் அவமானம்.. கஷ்டம்.." என்று சொல்லிவிட்டு

உடைகளை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டான்.

"அப்பா வரட்டுண்டா.." என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் அம்மா.

"நான் போயிட்டேன்னு தெரிஞ்சா அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டாரும்மா.. எனக்கு சந்தோசந் தாம்மா.... என்ன மாதிரி ஆளுங்கள வீட்ட விட்டு அடிச்சு தொறத் துவாங் கன்னுதான் கேள்விப் பட்டேன்.. ஆனா நீங்க அப்படி எல்லாம் செய்யலை.. நானாத்தான் போறேன்.. அந்த வகையில நான் ரொம்ப லக்கீம்மா.. ரொம்ப நன்றிம்மா.."

"டேய் எங்கடா போறே.. உனக்கு எதுவும் தெரியாதேடா.." அம்மா அழுதாள்.

"கூத்தாண்டவர் திருவிழாவுக்கு போ றேம்மா.. அங்க என்ன மாதிரி ஏராள மானவங்க வருவாங்க.. அங்க என்ன மாதிரி நெறைய பேரு வருவாங்க.. அங்க எனக்கு இன்னொரு அம்மாவும் கெடைப்பாங்க.. அக்காவும் கெடைப்பாங்க.. நான் நல்லா இருப்பேம்மா.. அப்பாவோட வாட்ஸ்அப் புக்கு நான் அப்பப்ப மெசேஜ் அனுப்ப றேம்மா.. என்று சொல்லி விட்டு நெடு நெடுவென்று படியிறங்கி தெருவில் நடந்து சென்றான் ஆனந்த். தரை இடிந்து போய் அதல பாதாளத்தில் விழுவது போல் உணர்ந்து அப்படியே மயங்கி விழுந்தார் காஞ்சனா.

சிறிது நேரத்திற்குப் பிறகு வந்து பார்த்த வரதப்பன், காஞ்சனாவின் நிலையை அறிந்து பதறிப் போய் தண்ணீர் தெளித்து எழுப்பினார். எழுந்த காஞ்சனா சொன்ன செய்தி அவரை அதிர்ச்சி அடைய வைத்தது. இதை எதிர் பார்த்திருந்தாலும், அது நடைமுறையில் சாத்தியமாகும் போது வலி இன்னும் கூடுத லாகவே இருந்தது.

ஆனந்தன் அரவாணியாய் மாறிப் போனதும், வீட்டை விட்டு போய் விட்டதும் ஊருக்குள் பரவ ஆரம்பித்தது. உறவுக்குள் பற்ற ஆரம்பித்தது. கேலியாக பலரும், பரிதாபமாக சிலரும் பார்க்க ஆரம்பித்தனர். காஞ்சனாவுக்கு அழுதழுது முகம் வீங்கி அடையாளம் தெரியாமல் மாறிப் போனார். வரதப்பன் வேலை நேரம் போக மற்ற நேரங்களில் வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போனார். அவ்வப்போது பலரும் வீட்டுக்கு வந்து அவர்களை சந்தித்து ஆறுதல் சொல்லி விட்டுப் போயினர். அப்படி வந்தவள்தான் காமாட்சி. பக்கத்து வீட்டுப் பெண். திருமணம்




ஆகி இரண்டு வருடங்கள் ஆகிறது. இரண்டு கால்களையும் இழந்த நிலையில் சக்கர நாற்காலில் வந்திருந்தாள்.

வரதப்பனை அப்பா என்றுதான் கூப்பிடுவாள். "அப்பா.. உங்களுக்கே தெரியும்.. கல்யாணம் ஆகிப் போன மூனே மாசத்துல எனக்கு ஆக்சிடென்ட் ரெண்டு காலையும் எடுக்க வேண்டியதாப் போச்சு.. மாமனார் வீட்டுல எல்லாரும்.. என்னை தள்ளி வெச்சிட்டு வேற பொண்ண கல்யாணம் பண்ணிக்கச் சொன்னாங்க.. அவரு என்ன சொன்னாரு தெரியுமா..? இதே ஆக்சி டென்ட் எனக்கு நடந்திருந்தா.. அவ என்னை விட்டுட்டு போயிருப்பாளா.. இல்ல நீங்கதான் என்ன விட்டுடுவீங்களா..? அப்படின்னு கேட்டாரு.. அவங்க யாராலயும் பதில் சொல்ல முடியலை.. அப்ப அவரு சொன்னாரு கடைசி வரைக்கும் காப்பாத்து வேன்னு சொல்லிதான் தாலி கட்டுனேன்.. அத நான் காப்பாத் துவேன்.. என்னோட உடம்புல உசுரு இருக்கிற வரைக்கும் இவதான் என் பொண்டாட்டி..ன்னு எனக்காக உறுதியா நின்னாரு.." என்று சொல்லி விட்டு கண்ணீர் விட்டாள் காமாட்சி.

"நான் ரொம்ப குடுத்து வெச்சவ.. ஆனா அந்த கொடுப்பினை ஆனந்துக்கு இல் லாமப் போச்சே.." என்று சொல்ல இருவரும் அதிர்ச் சியாக அவளைப் பார்த்தனர்.

அவரு எனக்கு சொந்தம் கெடையாது.. கல்யாணத்துக்கு ஒரு மாசத்துக்கு முன்னாடி தான் அவரைப் பார்த்தேன். கல்யாணம் ஆகி மூனு மாசத்துல ஆக்சிடென்ட்.. மொத்தம் நாலே மாசம்தான் பழக்கம்.. ஆனா அவரு எனக்காக எப்படி உறுதியா போராடுனாரு.. ஆனா நீங்க.. ஆனந்தன் உங்களுக்கு யாரோ இல்ல.. உங்க சதை.. தவமிருந்து பெத்த உங்க ரத்தம்.. பதினாலு வருசம் கொஞ்சிக் கொஞ்சி வளர்த்த உங்க உசுரு.. எனக்கு நடந்த மாதிரி

அவனுக்கு நடந்ததும் ஆக்சிடென்ட்டுதான்.. ஆனா அவன கை விட்டுட்டேங்களேப்பா.. யாரு என்ன சொன்னா என்பப்பா.. ஆனந்தனா பெத்தேன்.. இப்ப ஆனந்தியா வளத்த றேன்னு தைரியமா நெஞ்ச நிமித்தி சொல்லியிருக் கணும்ப்பா..” என்று சொல்லி முடிக்கவில்லை, காஞ்சனா வெடித்து அழ ஆரம்பித்தார். காமாட்சியின் கட்டைக் காலில் விழுந்து பாவ விமோசனம் கேட்பது போல் அழுதார்,. வரதப்பனும் பலர் அறிய முதன் முறையாக கண்ணீர் சிந்தினார். தான் தவறு செய்து விட்டதாய் முதன் முறை உணர்ந்தார்.

அதன் பிறகு பல நாட்கள் உறக்கமின்றி கழிந்தன அவர்களுக்கு. வரதப்பன் கண்களை மூடினால் உறவினர்களின் ஏச்சுப் பேச்சுகளும், அவமானங்களும்தான் கண்முன் நிற்கும். இப்போதெல்லாம் ஆனந்தன் ஆங்காங்கே பிச்சை எடுப்பது போலவும், இரவில் நின்று கொண்டு ஆண்களை அழைப்பது போல வும் தோன்றி இம்சை செய்தன. அவனை அவ்வாறு தவிக்க விட்டிருக்கக் கூடாது. என்று நொந்து கொண்டார்.

பல்வேறு இடங்களில் அரவாணிகள் தங்கும் இடங்களில் சென்று விசாரித்தார். அவனைப் பற்றி தெரியவில்லை. இந்தி யாவின் எந்த மூலையிலும் இருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்ததில் கலவரம் அடைந் தனர். எனினும் அவர்கள் நம்பிக்கை இழக்க வில்லை. அவன் சொன்னது போல் கட்டாயம் வாட்ஸ்அப்பில் தகவல் தெரிவிப்பான் என்று உறுதியாக நம்பினர். அதற்காக கடவுளையும் வேண்டினர்.

அவர்களின் நம்பிக்கையும் வேண்டுதலும் வீணாகவில்லை. இரண்டு மாதம் கழித்து ஆனந்திடமிருந்து வாட்ஸ் அப் வந்திருந்தது. ஒரு பெண்ணைப் போல் அலங்கரித்துக் கொண்டு ஒரு போட்டோவும் ஒரு குறுஞ் செய்தியும் வந்திருந்தது. “அப்பா, அம்மா நன்றாக இருக்கிறேன். பம்பாய் சென்று அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். இப்போது பெண்ணாக மாறிவிட்டேன். ஆனால் நீங்கள் வைத்த பெயரை மாற்ற வில்லை ஆனந்தன் என்பதை திருத்தி ஆனந்தி ஆக்கிக் கொண்டேன். என்னைப் பற்றி கவலைப்படா மல் நிம்மதியாக இருங்கள்.. என்றும் உங்கள் நினைவாக உங்கள் அன்பு மகள் ஆனந்தி..”

இருவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அள வில்லை. உடனே வரதப்பன் பதில் செய்தியை




அனுப்பினான். அன்பு மகள் ஆனந்திக்கு. அப் பாவின் அன்பு வணக்கம். இது வரை உன்னை ஆனந்தனாக வளர்த்தோம். இனி மேல் ஆனந் தியாக ஆயுள் முழுக்க வளர்க்க ஆசைப்படுகி றேன். எங்கிருந்தாலும் உடனே வா..

***

மருத்துவர் அருணாச்சலம் வரதப்பனை யும், காஞ்சனாவையும் வரவேற்றார். ஆனந்தன் எப்படி இருக்கான்..? என்று அவர் கேட்க, பதில் சொல்லாமல் கையிலிருந்த பத்திரிகையை நீட்டினார்.

அதை வாங்கிப் பார்த்த அருணாச்சலத் திற்கு ஆச்சர்யம். “இப்படி கூட பத்திரிகை அடிச்சி விழா எடுக்கலாமா..? உங்களுக்கு அந்த அளவுக்கு தைரியம் வந்திடுச்சா..?” பத் திரிகையை வாய்விட்டு படிக்க ஆரம்பித்தார்.

அன்புடையீர் வணக்கம். இதுவரை நாங்கள் பெற்றெடுத்து வளர்த்து வந்த ஆனந்தன் தனது 14வது வயதில் தனது குரோமோசோம் மாறுபாட்டின் காரணமாக பெண்ணாக மாற்றம் அடைந்துள்ளார். அதனால் அவரை மருத்துவ அறுவை சிகிச்சை மூலம் பெண்ணாக மாற்றம் செய் துள்ளோம். அதனை உற்றார், உறவினர், ஊரார்க்கு அறிவிக்கும் முகமாக ஆனந்தன் என்ற அவரது பெயரை ஆனந்தி என பெயர் மாற்றும் விழா நிகழும் மங்களகரமான திரு வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி திங்கள் 27ம் நாள், அந்தியூர், தவிட்டுப் பாளையம் 37இ, வேலாயுதம் தெருவில் உள்ள எங்களது இல்லத்தில் இனிதே நடைபெற இருக்கிறது. எனவே தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து எங்கள் மகள் ஆன7ந்தியை வாழ்த்தி அருளுமாறு அன்புடன் வரவேற்கிறோம்.

*வரதப்பன் – காஞ்சனா*
*தவிட்டுப்பாளையம், அந்தியூர்.*